Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 27 செவ்வாய்க்கிழமை (12.08.2014) பக்கங்கள் 20 ஓசை - 315

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# வடக்கில் காணாமற்போனோர் புள்ளிவிபரத்தில் முரண்பாடு



(கொழும்பு)

வடக்கில் யுத்தகாலத்தில் காணாமற்போனோர் தொடர்பாக ஏற்கனவே வெளியாகிய தகவல்கள் தொடர்பாக இப்போது சர்ச்சை கிளம்பியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உள்ளூர் அமைப்புகள் ஏற்கனவே வெளியிட்ட தகவல்கள் தவறானவை என்பது இப்போது புலனாகியுள்ளதாக காணாமற்போனோர் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் காணாமற்போனோர் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்காக விண்ணப்பித்தவர்களில் 155 பேர் மட்டுமே விசாரணைகளுக்கு ஆஜராகியிருந்ததாக, காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைக்ளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பராக்கிரம பரணகம

19 ஆம் பக்கம் பார்க்க

## ரயில் நிலையத்தில் விபத்து; வவுனியாவில் ஒருவர் பலி

(வவுனியா)


வவுனியா புகையிரத நிலையத்தில் நண்பர் ஒருவரை வழியனுப்பி விட்டு புகையிரதத்திலிருந்து இறங்க முற்பட்ட நபர் ஒருவர் கீழே விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கடந்த ஞாயிறு இரவு வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து இரவு 10 மணிக்கு கொழும்பு நோக்கி

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும்

### இந்திய நிபுணர் நம்பிக்கை



இலங்கையின் வடக்கில் போர்க்காலத்தில் காணாமற்போனோர் பிரச்சினை குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக் குழு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியும் என்று நம்புவதாக இந்த ஆணைக்குழுவில் செயற்பட இலங்கை அரசால் கூடுதலாக நியமிக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வல்லுநர்களில் ஒருவரான இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்தாஷ் கௌஷல் கூறியிருக்கிறார்.

இந்த நியமனம் குறித்து தன்னிடம் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுமார் 15 நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாகவும், பின்னர் இந்திய அரசின் உளவுத்துறையும் தன்னிடம் தொடர்பு கொண்டு இந்தச்

19 ஆம் பக்கம் பார்க்க

## வாழ்வியல் நம்பிக்கையை ஊடகங்கள் ஊட்டவேண்டும்

### யாழ். செயலக கருத்தரங்கில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

ஊடகம் என்பது மக்களுக்கு உண்மைகளையும் எதிர்காலம் தொடர்பான வாழ்வியல் நம்பிக்கையையும் ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் செயற்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க தகவல் திணைக்களத்தால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட அபிவிருத்தியில் பிரதேச ஊடகவியலாளர்களின் பங்களிப்பு தொடர்பான ஊடகக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

19 ஆம் பக்கம் பார்க்க

## கசூரினா கடலில் மூழ்கி மட்டக்களப்புவாசி பலி

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்த வயோதிபர் ஒருவர் கடலில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கியதில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. காரைநகர் கசூரினா கடற்கரையில் நண்பர்களுடன் சென்ற இவர், குளிக்க அனுமதிக்கப்படாத இடத்தில் குளித்துக் கொண்டிருந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## நல்லைக்குமரன் நூல் வெளியீடும் "யாழ்" விருது வழங்கலும்

### நாவலர் மண்டபத்தில் நேற்று கோலாகலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சைவ விவகாரக் குழுவின் நல்லைக்குமரன் 22 ஆவது நூல் வெளி யீடும் "யாழ்" விருது வழங் கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாநகர சபை ஆணையாளர் பிரணவநாதன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் மற்றும் மதகுருமார்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஆண்டுதோறும் நல்லூர் கந்தன் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நல்லைக்குமரன் நூல் வெளியீடும் "யாழ்" விருது வழங்கும் நிகழ்வும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.


## வெங்காய இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றிற்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஒரு கிலோகிராம், உருளைக்

19 ஆம் பக்கம் பார்க்க





"கிளிஞ்சுது போ... இந்தியா மட்டுமில்லை இவை அமெரிக்கா, கனடா, இங்கிலாந்திற்கு எத்தனையோ நாடுகளுக்கு எத்தனையோ தரம் சுத்தி வந்தவை... போக முதல் கொட்டை எழுத்தில செய்தி வரும். வந்த பிறகு பயணம் பிரயோசனமாக இருந்தது எண்டு அறிக்கை விடுவினம். அவ்வளவுதான். ஒண்டும் நடக்காது... தங்கட குடும்பங்கள அங்க பார்க்கிற படியால... அவைக்கு பயணம் பிரயோசனம் தான். எங்களுக்கில்லை."

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்
உள்ளே...

வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (விசேட மாக A/L பரீட்சை எழுதியவர்கள் இணைந்துகொள்ளலாம். (0775964299) (C/3775)

# குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கிளிநொச்சியில் தொடர் அவலம்



கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக மக்கள் குடிநீர் உள்ளிட்ட நீர்த் தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான சிறிய குளங்கள் வற்றியுள்ள நிலையில் நிலத்தடி நீரும் மிக வேகமாகக் குறைவடைந்து வருகிறது. கால்நடைகள் கூடக் குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாது அலைந்து திரிவதனையும் காணமுடிகிறது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, உள்ளூராட்சி சபைகள் மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்ற போது நாளுக்கு நாள் புதிய புதிய பிரதேசங்களில் குடிநீர்த் தேவை ஏற்பட்டு வருகிறது.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட நான்கு இலட்சம் லீற்றருக்கு மேல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் குடிநீருக்கான பற்றாக்குறை தொடர்ச்சியாக காணப்பட்டே வருகிறது.

தற்போது நிலவும் வறட்சியான நிலைமை தொடர்ந்தும் நிலவுமாக இருந்தால் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வது என்பது மிகப்பெரும் நெருக்கடியாக மாறுவதோடு நோய்த் தாக்கங்களும் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (29)

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில்

# கைத்தொழில் துறைகள் வடக்கில் பாரிய முன்னேற்றம்

## ஆளுநர் புகழாரம்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது தலைமையில் கைத்தொழில் துறைகள் பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றது என வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையக மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சிறுதொழில் முயற்சியாளர்களை சக்திப்படுத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வங்கிக்கடன் சார்ந்த நிதித்திறன்களை வலுப்படுத்தும் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இக்கருத்தரங்கு மிகப் பெறுமதி வாய்ந்த கருத்தரங்காக அமைந்துள்ளது.

மக்களின் நலன்சார்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் இணைந்து யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், பட்டதாரிகளாக உள்வாங்கப்பட்டுள்ள நீங்கள் அனைவரும் இவ்வாறான அபிவிருத்தி செயற்றிட்டங்களை வலுப்படுத்தும் வகையில் அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி மக்கள் வங்கிகளின் ஊடாக கடன்களைப் பெற்றுக் கொள்ளுதல், அதனால் அடையக் கூடிய நன்மைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு நீங்கள் பாலமாக செயற்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரான கடந்த ஐந்து வருட காலத்தில் யாழ்.மாவட்டத்தில் அரசினால் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகள் முன்னேற்றம் கண்டுவரும் அதேவேளை, பொருளாதாரத் துறையையும் மேம்படுத்துவதே எனதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் இலக்காகுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் கமகே, இலங்கை மத்திய வங்கியின் வறுமையொழிப்பு கருத்திட்டப் பணிப்பாளர் சிறிபத்மநாதன், கைத்தொழில் அபிவிருத்தி சபை பிரதிப் பணிப்பாளர் கெங்காதரன், உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.


13 ஆவது

HAPPY BIRTHDAY

பிறந்த நாள் வாழ்த்து



ரஞ்சன் ஜீவராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி

அனித்தா

இன்று தனது 13 ஆவது பிறந்தநாளை தன் இல்லத்தில் கொண்டாடுகிறார்

பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர்
அப்பா ரஞ்சன், அம்மா ஜீவராணி
தங்கை தேனுஜா
தம்பி தேனுஜன்
அம்மம்மா, சித்தப்பாமார்,
சித்திமார், மாமாமார்,
மாமிமார்

ஆலங்குளம், வசந்தபுரம், துனுக்காய்.

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY

(C/1979)


# முக்கிய கலந்துரையாடல்

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உப அதிபர் வீ.கருணைலிங்கம் தலைமையில் முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து ஆசிரிய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 2012/2014 கல்வியாண்டில் பயின்ற ஆசிரிய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மாணவர் மன்றத் தலைவர் ம.சயந்தறூபன் அறிவித்துள்ளார்.

# பிரமோற்சவம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயில் பிரமோற்சவம் நேற்று முன்தினம் ஞாயிறு காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறுகிறது.

18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 19 ஆம் திகதி தீர்த்தோற்சவமும், 20 ஆம் திகதி திருக்கல்யாண வைபவமும், 21 ஆம் திகதி ஆஞ்சநேயர் உற்சவமும் இடம்பெறும்.

# ஆசிரியர் கலாசாலை அதிபர் கணபதிப்பிள்ளைக்கு மணிவிழா

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்வே.கா. கணபதிப்பிள்ளையின் மணி விழா எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை கலாசாலையின் ரதி லக்ஸ்மி மண்டபத்தில் மணிவிழாக்குழுத் தலைவர் வீ. கருணலிங்கம் தலைமையில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், புனித வளனார் குருத்துவக்கல்லூரி அதிபர் அருட்பணி செ. அன்புராசா அடிகளார் ஆகியோரும், வரவேற்புரையினை கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் திருமதி. சாந்தினி வாகீசன், வாழ்த்துரைகளினை கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலைகளுக்கான கல்விப்பணிப்பாளரும் ஜனாதிபதி நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளருமாகிய எஸ். முரளிதரன், கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாக கல்விப் பணிப்பாளர் திருமதி என்.எப். எம்.ஹரிஜா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணகல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி பீடாதிபதி ச. அமிர்தலிங்கம், நீர்வேலி கலை பண்பாட்டு மன்றத் தலைவரும், தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய இ.குணநாதன், டாக்டர் லயன் வை. தியாகராஜா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவரையாளர் இ.மருதலிங்கம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவரையாளர் கழகத் தலைவர் வி.எஸ்.குணசீலன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி வதனி கேதாரநாதன்.

ஆசிரியர் சி.சிவரூபன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர் மன்றத்தலைவர் ம.சயந்தறூபன் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

மேலும் 'கணாதீபம்' மணிவிழா மலர் வெளியீடும், பிரான்ஸ் இசைக்குழுவினரின் இசை நிகழ்சியும் இடம்பெறவுள்ளது. 'கணாதீபம்' மலருக்கான அறிமுகவுரையினை நூலிகன் பதிப்பாசிரியரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளருமாகிய ச.லலீசன் வழங்கவுள்ளார். (63)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2011**

1. பொதுக் கலைமாணி பகுதி II-2011
2. சிறப்புக் கலைமாணி பகுதி II&III-2011

மேற்படி பரீட்சையை 25.08.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் 06.09.2014 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 21.08.2014 (வியாழக்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
17.04.2014

(C/3776)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 1933 - 06 - 28



மறைவு 2014 - 07 - 13

**அந்தோனிமுத்து பூரணம்**

12.07.2014 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாய் அந்தோனிப்பிள்ளை பூரணம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்தியமும் இன்று வீட்டில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(C/3434)



**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3395)

# சிற்றுண்டிச்சாலை பணியாளர்களால் அன்றாடம் துன்பப்படும் இளம் பெண்கள்

யாழ். நகரப் பகுதியில இளைஞர்கள் செய்யும் அடாவடித் தனத்தினால் இளம் பெண்கள் மற்றும் மாணவிகள் வீதியோரங்களில் தனியாக நடமாட முடியாத நிலை காணப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

தூர இடங்களில் இருந்து பாடசாலைகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும், வேலைத் தலங்களுக்கும் செல்வோர் தற்போது அதிகமாக பேருந்திலேயே தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு பயணம் செய்யும் இளம் பெண்கள் யாழ். பேருந்து நிலையத்தில் வந்து இறங்கி தமது கடமைக்குச்செல்ல முன்னகரும் போது அதைத் தடுத்து நிறுத்தும் முகமாக அவர்களின் முன் குறுக்கே கைகளை நீட்டியவாறு சிற்றுண்டிச் சாலைகளில் பணிபுரியும் இளைஞர்கள் தமது கடைகளுக்கு வருமாறு அழைத்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி யாழ். பஸ் நிலைய பின் வீதியில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் பணிபுரியும் சில இளைஞர்களே பயணிகளின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக செயற்பட்டு வருவதாகவும் அதிலும் குறிப்பாக இளம் பெண்களை இடைமறித்து முன்நகரவிடாது பின் அடியெடுத்து வைக்கும் அளவுக்கு செயற்பட்டு வருவ தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக தனியார் பேருந்தில் இருக்கும் பெண்களிடம் கடையில் நின்றவாறு இளைஞர்கள் சேட்டை புரிவதுடன் நான் அழகாக இருக்கிறேனா, இறங்கி வாறாயா எனச் சைகை மூலம் கேட்டு அசிங்கப்படுத்துவதுடன், அவர்களை மன உளைச்சலுக்கும் ஆளாக்கி வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக கடை உரிமையாளரோ மற்றும் தனியாா பேருந்து நிலைய பொறுப்பாளர்களோ கண்டும் காணாததுபோல் செயற்படுவது மிகவும் வேதனையளிப்பதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இவ்வாறான கீழ்த்தரமான இளைஞர்களின் செயற்பாட்டால் நாளாந்தம் பெண்கள் கூனிக்குறுகி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதுடன், இது தொடர்பாக எமது பத்திரிகையல் முன்னதாக தெரிவிக்கப் பட்டு பின்னர் சிறிதுகாலம் இல்லா திருந்த செயற்பாடு மீண்டும் தலை தூக்கியுள்ளது.

எனவே இந்தச் செயற்பாட்டை நிறுத்த உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அதிபர் நியமனம்

(திருநெல்வேலி)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை இளைப்பாறுவதால் கலாசாலையின் பிரதி அதிபராக கடமையாற்றிய வீ.கருணலிங்கம் தற்காலிக அதிபராக கடமையாற்றவுள்ளார்.

இவரது பதவிக்காலம் எதிர் வரும 14 ஆம் திகதி வியாழக் கிழமை முதல் அமுலுக்கு வருகிறது.

புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்படும் வரை இவர் அதிபராக கடமையாற்றவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (137)

# வறிய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்க ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

கஷ்ட அதிகஷ்ட பிரதேசப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக பாதணிகள் வழங்க கல்விச் சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் உள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சுமார் 40 இலட்சம் மாணவர்கள் நன்மையடையவுள்ளனர்.

இதற்கிணங்க ஒவ்வொரு வலயக்கல்வி அலுவலகங்களின் கீழ் இயங்கும் கஷ்ட அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் பாதணிகள் வழங்கப்படவுள்ளன. (10)

# 15 வயது சிறுவன் காணாமற் போயுள்ளான்

## வவுனியா பொலிஸில் முறைப்பாடு




வவுனியாவில் 15 வயது சிறுவன் ஒருவன் காணாமற் போயுள்ளான் என வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் தனது பெற்றோருடன் வசித்து வந்த சிவகுமார் பிரசாந் (வயது-15) என்ற சிறுவனே. இவ்வாறு காணாமற்போயுள்ளான் என அவரது பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி அவர் கல்வி கற்கும் சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலயத்திற்குச் சென்று விட்டு வீடு திரும்பிய பின்னர், மீண்டும் வீட்டில் இருந்து வெளியே சென்ற சிறுவன் இன்று வரை வீடு திரும்பவில்லை. இந்நிலையில் தமது உறவினர்கள், தெரிந்தவர்க்ள் என பல இடங்களுக்கும் சென்று தேடிய நிலையிலும் சிறுவன் கிடைக்காதமையால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிறுவனின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (70)

# ஒற்றைக் கையால ஓடும் சாரதியும்... மிச்சக்காசு இல்லாத நடத்துநரும்...






இடது கையில பெரிய வெள்ளிச் சங்கிலி. பிரெஞ் குறுந்தாடி. வலது கையில ஏதோ இங்கிலிஸ் பேரொண்டு பச்சை குத்தியிருக்கு. இஸ்லாட்டில் ஸ்ரிக்கர் ஒட்டியிருக்குப் போல. வலது கைவிரல்கள் ரண்டில பெரிய வெள்ளி மோதிரங்கள். நீல நிற ரீசேர்ட். இறுக்கமான டெனிம் ஜீன்ஸ்... இடது கை ஸ்ரேறிங்கைப் பிடிக்க, வலது கை ரெலிபோனில் இருந்தது. வழிநெடுக தொலைபேசியில் பேசிக்கொண்டே வந்தார்.

இதுதான் நாங்கள் வவுனியாவில இருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்து கொண்டிருந்த பஸ்ஸின்ரை சாரதியினுடைய அங்க அடையாளங்களும் சேவைச் சிறப்புகளும்..

பஸ்ஸில முரளி, வடிவேலு, மணிவண்ணன் (ஹீரோயின் ஆரெண்டு சரியாத் தெரியேல்ல) நடிச்ச படத்தைப் போட்டிருந்தார்.

சனங்கள் எல்லாம் வடிவேலுவின்ரை அமர்க்களமான பகடியில் வயிறு குலுங்கிக் கொண்டிருந்திச்சினம்.

ட்றைவர் 90, 100 கிலோமீற்றர் வேகத்தில மிதிச்சுக் கொண்டிருந்தார்.

பின்னுக்கு வாற எந்த பஸ்ஸும் முந்தக் கூடாது. முன்னுக்குப் போற பஸ்ஸை விடக்கூடாது... எண்ட பிடிவாதத்தில பிடிபிடியெண்டு பிடிச்சுக்கொண்டு வந்தார்.

பஸ் பறந்து கொண்டிருந்திது.

வடிவேலு கலக்கிக் கொண்டேயிருந்தார்.

பஸ்ஸில முன்னுக்கு ஒரு நடத்துநர். பின்னுக்கு ஒரு நடத்துநர். முன்னுக்கு நிண்ட நடத்துநர் ஒற்றைக் கையைக் காட்டி 'வழி விடு வழி விடு' எண்டு அவசரகாலச் சேவையாளனைப் போல அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார்.

பின்னுக்கு நிண்ட நடத்துநர் பயணிகளை வழிநடத்திக் கொண்டிருந்தார். பத்து ரூபாய்க்குக் குறைவான மிச்சக்காசு எவருக்கும் கிடையாது எண்டதில வலு கவனமாக இருந்தார். சில்லறைக்காசை கொண்டு பஸ் ஏறாதது உங்கட (பயணிகளின்ரை) குற்றம் எண்டமாதிரிக் கதைச்சார்.

பறந்து கொண்டிருந்த பஸ் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கும் வாகனங்களை முந்தும்போது, ரண்டு பக்கமும் சும்மா ஒரு உலுப்பு உலுப்பும். அந்த நேரம் கம்பியில பிடிச்சுத் தங்களை ஒரு மாதிரி நிலைப்படுத்திக்கொண்டு, மீண்டும் வடிவேலுவிட்டப் போய்க்கொண்டிருந்திச்சினம் பயணிகள் எல்லாரும்.

'மல்லாவி பஸ் எங்க நிக்குது? முல்லைத்தீவு பஸ் எப்ப வருகுது?' எண்டு கனகராயன்குளத்தில வரேக்க கேட்டார் சாரதி....

பிறகு, கிளிநொச்சிக்குக் கிட்ட வரேக்க – முறிகண்டி கழிந்தபோது – கேட்டார், 'வட்டக்கச்சி பஸ் எங்க வருது? முழங்காவில் பஸ் வந்திட்டுதா? எண்டு.

பேந்து, பரந்தனுக்குக் கிட்டவாகப் போய்க்கொண்டிருக்கேக்க கேட்டார், முல்லைத்தீவில இருந்து வவுனியாவுக்குப் போற பஸ் வந்து கொண்டிருக்கா? எண்டு.

இந்த பஸ்களில வாற சனங்கள் யாழ்ப்பாணம் போறதாக இருந்தால் அவையை ஒவ்வொரு சந்தியிலயும் வைச்சு ஏத்திறதுக்கே இந்தப் பாடு. அந்த பஸ் எங்க நிக்குது? இந்த பஸ் எங்க வருகுது? எண்ட கேள்வியெல்லாம்.

இப்பிடியே 90 மீற்றர் வேகத்தில பஸ்ஸை ஓட்டிக்கொண்டு, ஒற்றைக்கையால ரெலிபோனையும் கதைச்சுக்கொண்டு வாற சாரதியைப் பற்றி ஒருத்தரும் கேள்வி கேட்கயில்லை. அதை யாரும் பொருட்டாக எடுத்த மாதிரியும் தெரியேல்ல.

இதெல்லாம் ஏதோ சகஜமான ஒண்டு எண்டமாதிரி அவரவர் தங்கள் பாட்டில இருந்திச்சினம்.

அவைக்கு (பயணிகளுக்கு) வடிவேலுவின்ர பகடியோ... குத்துப்பாட்டோ போதும். ஆனால், இப்பிடிப் பொறுப்பில்லாமல் ஒவ்வொருவரும் இருக்கேக்கதான் விபத்தில போய்ச் சிக்கிறது.

பறந்து கொண்டிருந்த பஸ் எழுதுமட்டுவாளுக்கும் மிருசுவிலுக்கும் இடையில ஒரு உலாஞ்சல் உலாஞ்சிச்சுது... ஏனெண்டால், முன்னுக்குப் போய்க்கொண்டிருந்த லொறிக்காரன், பஸ் முந்திறதுக்கு ஒழுங்காக இடம் குடுக்கேல்ல. அதால பஸ் ட்றைவர் வீதியை விட்டு விலத்தி பஸ்ஸைச் செலுத்தினார். அந்த நேரம்பார்த்து, முன்னே இன்னொரு வாகனம் வந்தது. இதை எதிர்பார்க்காத சாரதி, பஸ்ஸை நிதானப்படுத்த அங்கும் இங்குமாக செலுத்தினார்.

அப்பதான் கனபேர் துடிச்சுப் பதைச்சுக் கொண்டு குய்யோ முறையோ எண்டு கத்திச்சினம்.

அப்பிடியே ட்றைவருக்கும் நாலு பேச்சும் வசையும்..

பொறுப்பில்லாமல் பஸ்ஸை ஓட்டுகிறாராம்..... பஸ்ஸை ஓட்டிக்கொண்டே ரெலிபோன் கதைக்கிறாராம்.... போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறாராம்.. எல்லாத்தையும் தாங்கள் பார்த்துக் கொண்டுதான் வருகினமாம்..

ஆனால், எல்லாம் ஒரு அஞ்சு நிமிசம்தான். பிறகு வாழ்க்கையில எல்லாம் சகஜம்பா எண்ட மாதிரி... அதே வடிவேலு பகிடியும்.. அதே வேகமும்.. முன்னுக்கு நிற்கும் நடத்துனரின் நாட்டாமையும்....

பஸ் 100 மீற்றர் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது.

காவல்துறையின்ர காதில பென்னாம் பெரிய பூ...

வாக்குறுதி முழுமதியை போன்றது. உடனே நிறைவேற்றா விட்டால் அது நாளுக்கு நாள் தேய்ந்துவிடும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மந்திரவாதிகளும் தமிழ் மக்களும்!

அரசின் மீது ஏதேனும் குற்றத்தைக் கண்டுபிடித்து ஆவேசமாக அதை எடுத்துச் சொன்னால் போதும், "நம்மாட்கள் சிங்கள அரசுக்குக் குடுக்கிறார்கள் குடுவை..." என்று தமிழர்கள் புளகாங்கிதப்பட்டு விடுவார்கள் என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அந்தக் குற்றச்சாட்டினால் தமிழ் மக்களுக்கு என்ன பிரயோசனம், என்ன ஆகும் என்று யோசிக்காமலே, "குற்றங்கள் செய்தது அரசுதான்; இப்போதும் குற்றம் அரசின் பக்கம்தான் இருக்கிறது" என்று அடித்துச் சொன்னால்... "நம் தலைவர்களா கொக்கா" என்று புல்லரித்துப் போகவே நமது மக்களைப் பழக்கி வைத்திருக்கிறார்கள்.

இல்லாவிட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரானவர் "அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை அரசே முறித்தது; தீர்வு ஏற்படாமைக்கு அரசுதான் காரணம்" என்று அடித்துவிட்டுப் போய்க்கொண்டிருப்பதை, "இதுவல்லவோ தமிழ்வீரம்!... எப்பிடி உடன மறுத்தானைக் குடுத்திருக்கிறார் தலைவர்!..." என்று தமிழ்ச் சூழலும் தமிழ் ஊடகச் சூழலும் புல்லரித்துக் கேட்டுக் கொண்டிருப்பது எங்ஙனம்?

இப்படியொரு முட்டாள் வீரத்தை வேறெந்த சமூகத்திலாவது கொண்டாடுவார்களா? தீர்வு தேவைப்படுவது யாருக்கு என்பதை மறந்துவிட்டு, "தீர்வு தராமல் முறித்தது அவர்கள்தான்" என்று இந்தத் தலைவர்கள் சொல்வதைக் கேட்டு, "தமிழ் வீரம் விளைந்தது பார்!" என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறதே!

இத்தனைக்கும் இந்த நாட்டின் ஜனாதிபதி சொன்ன ஒரு கருத்துக்குத்தான் தமிழ்த் தலைவர் மறுத்தான் குடுக்கிறார். அதனால்தான் தலைவர் என்ன சொல்கிறார் என்பதை ஆராயாமலே, அதன் விளைவென்ன என்றும் கவனத்தில் எடுக்காமலே, எதிரியை மடக்கிவிட்ட வீர உணர்வில் திளைக்கிறது நம் சமூகம்.

ஜனாதிபதி சொன்னது என்ன? இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாதிருப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே காரணம். தீர்வு காண்பதில் கூட்டமைப்பினரே இழுத்தடிக்கின்றனர். தனது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அதனை தனது பலவீனம் என்று கருதினால், பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இதுதான் அவர் சொன்னது.

இப்போது, இதற்கு மறுத்தான் குடுத்து தமிழ்த் தலைவர் சொல்லியிருப்பதை மேலே வாசித்துப் பாருங்கள். இந்த நாட்டில் அரசியல் அதிகாரங்களில் நமக்குப் பிரச்சினை இருக்கிறது; அதற்குத் தீர்வு தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருப்பவர்கள் இங்கு தமிழர்களா சிங்களவர்களா என்பதையும் ஒருமுறை சிந்தியுங்கள்.

நாட்டின் ஜனாதிபதி சொல்கிறார், தீர்வு வேண்டுமென்று கேட்கிறீர்கள், ஆகவே பேச்சுவார்த்தைக்கு வாருங்கள், பேச்சுக்கு வராமல் இழுத்தடித்துக் கொண்டிருக்காதீர்கள் என்கிறார்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் என்ன சொல்கிறார்? முந்திய பேச்சை முறித்தது அரசுதான், அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை, இனப்பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பதற்கு நாம்தான் காரணம் என்று அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதுதான் திரு சம்பந்தன் அவர்கள் சொல்லும் அந்த வீரப் பதில்!

இப்படிச் சொல்லிவிட்டால், சர்வதேசம் மிச்சத்தைப் பார்த்துக் கொள்ளும் என்றே தமிழ் மக்கள் நம்ப வைக்கப்படுகிறார்கள். எந்த மிச்சத்தை அவர்கள் பார்ப்பார்கள் என்று தலைவர்களும் சொல்வதில்லை; தமிழர்களும் கேட்பதில்லை.

நாம் பேசப் போகாவிட்டால், அரசுதான் பாவம் கஷ்டப்படப் போகிறது என்பதான ஏமாற்று நம்பிக்கையே தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகிறது. அரசுடன் பேசாமலே தீர்வைக் கொண்டுவரும் மந்திரவித்தையை தலைவர்கள் அறிவார்கள் என்று படு பாமரத்தனமாக நம்பிக்கொண்டிருக்கும் சமூகமா நாங்கள்? கடைசியில் அவ்வளவுதானா நாம்?

- ஆசிரியர்.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த சர்வதேசரீதியில் விழிப்புணர்வு

(கொழும்பு)

இலங்கை சார்பாக சர்வதேச ரீதியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் சர்வதேச சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரமொன்றினை மேற்கொண்டுள்ளது.

இதன்விளைவாக இலங்கையின் புராதன சின்னங்களை தாங்கிய 1200 மெகா டக்சிகள் சர்வதேசரீதியில் இலண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கொரியா, மற்றும் ஜப்பான் ஆகிய இடங்களில் பிரசாரத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இலண்டனில் அமைந்துள்ள மிகப்பெரிய நகரங்களான, மன்செஸ்ரர், பேர்மிங்காம், மற்றும் இலண்டன் பிரதான நகரம் ஆகியவற்றிற்கு 450 மெகா டக்சிகளை சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்டது. இவற்றுள் 300 டக்சிகளின் பிரசார தொடக்கவிழா அண்மை யில் இலண்டனில் ஆரம்பித்து மிகவும் கோலாக லமாக இடம்பெற்றுள்ளது.

"இலங்கை - ஒரு பயணத்திற்காக காத்திருக்கிறது" என்று எழுதப்பட்ட தகடுகள் டக்சியின் சிறந்த தெளிவான பக்கங்களில் பொறிக்கப்பட்டதுடன், பின் இருக்கைகளின் பக்கம், டக்சியின் சீட்டுக்களில் இலங்கையின் முக்கிய சுற்றுலாத் தலங்களின் படத்தை பொறித்த வண்ணம் மக்களை கவரும் வகையில் நகரம் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டது. இலண்டனில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பிரசாரம் மொத்தமாக 12 வாரங்கள் தொடர்ந்தும் நடத்தப்படவுள்ளது.

# மக்கள் தொகையில் 10 வீதத்தினர் மனநோயால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்கள் தொகையில் 10 சதவீதத்தினர் ஏதோ ஒரு மனநோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இவர்களில் பலர் பலவிதமான மனநோய்களுக்கு உள்ளாகியுள்ளதாக மேலும் தெரிய வந்துள்ளது.

ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் விசேட நிபுணர்கள் இணைந்து மேற்கொண்ட இந்த ஆய்வில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளடக்கப்படவில்லை.

இந்த மாகாணங்களிலும் மேற்படி ஆய்வை மேற்கொண்டிருந்தால், முடிவுகளில் பாரிய வித்தியாசம் ஏற்பட்டிருக்கும் எனக் கூறப்படுகிறது. நாட்டில் காணப்படும் பொருளாதார சுமை, மக்கள் வாழ்வதற்கு தேவையான வருமானம் கிடைக்காமை, கல்வி தகுதிகளுக்கு ஏற்ற தொழில் வாய்ப்புகள் கிடைக்காமை, மக்களின் வாழ்க்கை வேகம் உட்பட பல விடயங்கள் இந்த மனநோய்களுக்கு காரணமாக அமைந்துள்ளன.

நாட்டில் வாழும் மக்கள் தொகையில் பலருக்கு தாம் எண்ணியபடி வாழ முடியாத சூழ்நிலைகள் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும் மக்கள் தொகையில் 10 வீதமானவர்கள் மனநோய்களினால் பீடிக்கப்பட்டிருப்பது பாரதூரமான நிலைமை எனவும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்கு ஆட்சியாளர்கள் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# தெய்வத்தின் சாபத்தில் இலங்கை மூழ்கியுள்ளது

## ரணில் தெரிவிப்பு

ஆட்சியாளரின் செயற்பாட்டால் கடவுளின் சாபமே இலங்கையை பாதித்துள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிங்கிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டார். நாட்டின் நீர் முகாமைத்துவம் தொடர்பில் உரிய வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்த ஆளும் அரசாங்கம் தவறியுள்ளது.

குருநாகல், பொலன்நறுவ, அம்பாந்தோட்டை ஆகிய பல பிரதேசங்களில் கடுமையான வறட்சி காணப்படுகின்றது. இப்போது இங்கு சேற்று நீரையும் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. மழை பெய்ய வேண்டும் என்றால் அரசன் நன்மை செய்ய வேண்டும்.

நாட்டில் தற்போது எங்கு தர்ம காரியங்கள் இடம்பெறுகின்றன. கண்டியில் தலதா பெரஹராவுக்கு முன்னதாக கார் பந்தயம் நடத்தினால் கடவுள் நாட்டின் மீது சாபம் இடுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அந்த சாபமே மக்களை பாதிக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

# ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி

## பிரதமர் தெரிவிப்பு

நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்ததை விட நாட்டின் அபிவிருத்தி வேகம் சமீபத்திய பொருளாதார வேகம் துரித்கதியில் முன்னேற்றம் கண்டுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சகல ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி துரித வேகத்தில் வளர்ந்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்வளர்ச்சி தேசிய நல்லிணக்கம் ஆகியன அனைத்து சமூகத்தின் ஒற்றுமை புரிந்துணர்வு மூலம் ஏற்பட்டதொன்றாகும். எனவே சர்வதேச சமூகங்கள் தேவையற்ற குற்றங்களை நாட்டின் மீது சுமத்துவது தேவையற்றதொன்றாகும் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வளர்ச்சி நல்லிணக்கத்தை எவராலும் ஒரு இரவில் செய்து முடிக்க இயலாது. நீண்ட காலத் திட்டம், வரையறை ஆகியவற்றின் மூலம் மட்டுமே நீண்ட கால அபிவிருத்தியினை மேற்கொள்ள முடியும். கடந்த சனிக்கிழமை கொரியாவில் இடம்பெற்ற அமைதி, பாதுகாப்பு, மற்றும் அபிவிருத்திக்கான உலகளாவிய சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றம் சமரச செயல் முறை சமூகத்தில் நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு சூழலினை ஏற்படுத்தும். இதன் மூலம் பாதுகாப்பான முதலீடு வாய்ப்புக்களை நாட்டில் தொடங்க வழிவகைகள் சாதகமாகக் காணப்படும். மனித உரிமைகள் பிரகடனத்தின் நோக்கமாக தனிம்னித சுதந்திரத்துக்கான அபிவிருத்தி, சமத்துவம், கடமை, நீதி, உரிமைகள், சகோதரத்துவம் ஆகியன உலகளாவிய ரீதியில் பேணப்பட வேண்டுமென்பதாகும்.

நான் இதைச் சொல்வதில் பெருமையடைகிறேன். ஏனெனில் இலங்கை பயங்கரவாதத்தை முற்றாக அழித்த ஓர் நாடாகும். இந்நாட்டில் பயங்கரவாதம் அழிவடைந்து 5 வருடங்கள் கழிந்த நிலையில் இவ்வாறானதொரு அபிவிருத்தி , நல்லிணக்கம் ஆகியன யாரும் எதிர்பார்த்திராத ஒன்றாகுமென குறிப்பிட்டார்.

இந்நாட்டில் தேசிய நல்லிணக்கம் துரித அபிவிருத்தி முயற்சியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே மேற்கொண்டதுடன் ஆசியாவின் அதிசயமாக இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் உறுதியுடன் செயற்பட்டார். சமாதானமும் நிலையான அபிவிருத்தியும் நாட்டின் இருதூண்கள் போன்றது. நிலையான சமாதான அபிவிருத்தியை தோற்றுவிக்க பல சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்றார்.

# புலி இளைத்தால் எலி..?

- அப்பாத்துரை அபூபக்கர் கட்டுரையிலிருந்து




**பெருவாரியான தமிழர்கள் அரசிற்கெதிரான, அரசை சங்கடப்படுத்தும் விதமான போராட்டங்கள் எவ்வளவிற்கெவ்வளவு அதிகமாக நடக்கிறதோ அவ்வளவிற்கு அவ்வளவு அதிகமாக் சந்தோசப்படுவார்கள். இந்தப் போராட்டங்கள் முற்றி, என்றோ ஒருநாள் மகிந்தவின் சங்கு அறுக்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். அல்லது அப்படியாக தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்கிறார்கள்.**

**அண்மையில்** யாழ்ப்பாணத்திலுள்ள இளம் அரசியல் செயற்பாட்டாளரொருவரின் மின்னஞ்சல் வந்திருந்தது. இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 16ஆம் திகதி கோப்பாயில் நடத்திய கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பனுப்பியிருந்தார், அந்த மின்னஞ்சலின் தலைப்பு மக்கள் போராட்டம் என்றிருந்தது.

இதற்கு முன்னர் முல்லைத்தீவில் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் நடத்திய போராட்டத்தின் போதும், இதேவிதமான அழைப்பொன்றை மற்றுமொருவர் அனுப்பியிருந்தார். அப்பொழுது அவரிடம் சொன்னேன்- இது மக்கள் போராட்டமல்ல காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் நடத்தும் போராட்டம் என சொல்லுங்கள் என. அவரிற்கு கோபம் வந்துவிட்டது. காணாமல் போனவர்களின் குடும்பத்தினரையும், அந்த விவகாரத்தையும் கொச்சைப் படுத்துவதாக சினந்தார்.

கடந்த ஐந்து வருடங்களில்- நந்திக் கடல் தோல்வியின் பின்னர்- ஈழத் தமிழர்களில் ஏற்பட்டுள்ள முக்கிய பண்பு மாற்றங்களில் ஒன்று இது. எதற்கெடுத்தாலும் ஒன்றில் விக்கிவிக்கி அழுகிறார்கள், அல்லது முகம் சிவக்க கோபப்படுகிறார்கள்.

இந்த கோபம் எப்படிப்பட்டதெனில், எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிராளிக்கு சகுனம் பிழைத்தாலே போதும் என்ற வகையானது. இதனாலேயே விடயங்களில் நிதானித்து செயற்பட முடியாதவர்களாகிவிட்டார்கள். நந்திக் கடலோரத் தோல்வி நினைவுகளில் செரிமானம் அடையுமட்டும் இந்த நிலை நீடிக்கலாம்.

உண்மையில் வடக்கில் இப்பொழுது நடப்பவை பொது மக்கள் போராட்டமா என்பது சிந்தனைக்குரியது. இந்தப் போராட்டங்கள் தொடர்பான செய்திகளையும், சமூக வலைத்தள உரையாடல்களையும் நோக்கினால் ஒரு அரபு வசந்தம் போல பொது மக்கள் அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து விட்டார்களோ என்று தோன்றும். ஆனால் உண்மை தலைகீழானது.

அரசினால் காணாமல் போகச் செய்யப்பட்ட தங்கள் உறவுகளின் விடுதலைக்காக எதையாவது செய்துவிடத் துடிக்கும் உறவுகளின் (இரத்த உறவினர்களின்) பரிதாப நிலையை தமிழ் அரசியல் வாதிகள் தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ள ஊறுகாயாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதே உண்மை. இந்தப் போராட்டங்கள் பற்றிய சுயமதிப்பீடுகளெதுவும், போராட்டத்திற்காக அறைகூவல் விடுக்கும் அரசியல் தலைமைகளிடம் இல்லை.

அரசியல் வாதிகளுக்கு அடுத்தநாள் பத்திரிகையில் மைக்கும் வாயுமாக போட்டோ வந்தால் போதும், அப்படியே அதை வைத்து பிக்கப் பண்ணி வெளிநாடுகளில் எழுச்சி உரைகள், போர்க்குற்ற மாநாடுகள் சில பல பேட்டிகள் எண்டு கொஞ்சநாள் தாக்காட்டலாம். ஆனால் அப்பாவிச் சனங்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதே உண்மை.

கடந்த ஐந்து வருடங்களில் வடக்கில் அல்லது கிழக்கில் அல்லது தமிழ் அரசியல் தலைமைகளினால் செய்யப்பட்ட போராட்டங்கள் எத்தனை?

காணாமல் போனவர்கள் பற்றிய உண்மைநிலையை வெளிப்படுத்தக் கோரி, காணாமல் போனவர்களின் குடும்பத்தினரும், அரசியல்கட்சிகளும் சேர்ந்து போராட்டம் நடத்துகின்றனர். மீள்குடியேற்றச் சொல்லி, அந்த அந்த பகுதி மக்கள், அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து போராட்டம் நடத்துகின்றனர்.

இந்த போராட்டங்களில் எத்தனை மக்கள் கலந்து கொள்கிறார்கள்? அவர்களெல்லாம் யார்? இந்த போராட்டங்களில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை என்றாவது நூற்ற, ஆயிரத்தை தொட்டதா? அதிகமேன், வடக்கு மாகாணசபை தேர்தலில் பெருவெற்றிபெற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தனித்துச் செய்த முதலாவது மேதினம் இந்த வருட மேதினம். சாவகச்சேரியில் நடந்த அவர்களின் பிரதான நிகழ்வில் எத்தனை் பேர் கலந்து கொண்டனர்? ஒரு நூற்றைம்பது பேர் எனக் கொள்ளலாம்.

காணாமல் போனவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் போராட்டங்களிலெல்லாம் குறிப்பிடத்தக்க அளவில்தான் மக்கள் கலந்து கொள்கிறார்கள். இன்னும் சொன்னால் இடங்கள்தான் மாறுமே தவிர, முகங்கள் மாறாது. காணாமல் போனவர் போராட்டம் எங்கு நடந்தாலும், ஒரே ஆட்களே எல்லா இடமும் சென்று போராட வேண்டிய நிலை.

யாழ்ப்பாணத்தில் கமரூன் வந்தாலும் அவர்கள்தான். முள்ளிவாய்க்காலில் நவிப்பிள்ளையை சந்திக்க வேண்டுமென்றாலும் அவர்கள்தான். ஒரு ஊடகவியலாளர் சொன்னார் இந்தப் போராட்டங்களை நடத்துகின்ற இரண்டு தமிழ் பிரதான அரசியல் அமைப்புக்களிடமும் ஒரு லிஸ்டே இருக்கிறதாம். போராட்டத்திற்கு முதல்நாள் எல்லாருக்கும் போனடிச்சுச் சொல்லுவார்களாம் நாளைக்கு போராட்டம் மறக்காம வந்திடுங்கோ எண்டு.

இதிலென்ன வேடிக்கை என்றால் கிட்டத்தட்ட இவர்கள் எங்கெல்லாம் போகிறார்களோ அங்கெல்லாம் போகிற இன்னொரு குரூப்பும் இருக்குது. காணாமல் போனவர்களின் உறவினர்கள் இந்தப்பக்கம் இராணுவம் எங்கள் பிள்ளைகளைக் காணாமல் போகச் செய்தது என்று பதாகை பிடிக்க, அந்தப்பக்கமாக இரண்டாவது குரூப் புலிகள் பிடித்தார்கள், நவிபிள்ளையே வெளியேறு என்று பதாகை பிடித்தபடி நிற்கும். எண்ணிக்கைகளில் சில. வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனால் எங்க போராட்டம் நடந்தாலும் இரண்டு குரூப்பும் ஆஜராகுறது என்னமோ உண்மை.

நேரடியாக பாதிக்கப்பட்ட கொஞ்ச மக்கள், நிறைய அரசியல் பிரமுகர்கள், கலந்து கொள்ளும் மக்களிலும் சற்றே எண்ணிக்கையில் குறைந்து ஊடகவியலாளர்கள் - இந்தக் கலவை தான் எல்லா இடங்களிலும் நடக்கும் போராட்டங்களிலும் காணும் முகங்கள்.

இந்த வகையான போராட்டங்கள், கிட்டத்தட்ட ஒரு இலக்கியக்கூட்டத்தை ஒத்ததாகிவிட்டது. ஒரு குறிப்பிட்ட வட்டத்தினர்தான் வருவார்கள். இந்த கூட்டத்திற்கு இன்ன இன்ன ஆட்கள் வருவார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். காணாமல் போனவர் போராட்டங்களும் இப்படிப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது.

நிறைய காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஒரே குடும்பமாக, நெருக்கமானவர்களாக மாறிவிட்டனர். அவர்கள் தங்களிற்குள் சுகதுக்கங்களை பரிமாறிக் கொள்கிறார்கள். முல்லைத்தீவு போராட்டத்தில், வயதான பெண்மணியொருவர், அவர்கள் வீட்டில் ஆடு ஈன்றதாக கடந்தமுறை சொன்ன ஆட்டுக்குட்டிகள் பற்றி இன்னொரு பெண்மணியிடம் விசாரித்து கொண்டிருந்ததை கேட்டேன்.

இதனை ஏன் குறிப்பிடுகிறேன் எனில், போராட்டங்களில் மிகக் குறைந்தளவிலான ஒரு குறிப்பிட்ட தரப்பினரே பங்குகொண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக் காட்டவே.

ஆனாலும் இப்படியான போராட்டங்கள் நடப்பதை பலர் உளமார விரும்புகிறார்கள்.

பெருவாரியான தமிழர்கள் அரசிற்கெதிரான, அரசை சங்கடப்படுத்தும் விதமான போராட்டங்கள் எவ்வளவிற்கெவ்வளவு அதிகமாக நடக்கிறதோ அவ்வளவிற்கு அவ்வளவு அதிகமாக சந்தோசப்படுவார்கள். இந்தப் போராட்டங்கள் முற்றி, என்றோ ஒருநாள் மகிந்தவின் சங்கு அறுக்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். அல்லது அப்படியாக தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்கிறார்கள்.

உண்மையில் போராட்டங்களில் பங்கு பற்றுகிறவர்களை விட போராட்டம் நடைபெற்றபின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொள்கிறவர்களின் எண்ணிக்கை அதிகம். வெளிநாட்டில இருக்கிறவையை நான் இதில சொல்லயில்லை அது தனி டிப்பார்ட் மெண்ட. இது இங்கினைய கோயில் திருவிழாவில குத்துவெட்டுப்படுகிற குரூப்பைத்தான் சொல்லுறன்.

ஈழத்தமிழர்களின் மரபான இயல்பது. விடுதலைப்புலிகளின் காலத்திலும், இது தான் நடந்தது. பெரும்பாலான தமிழர்கள் படிக்க விரும்பினார்கள், பட்டம் பெற விரும்பினார்கள், வெளிநாடு செல்ல விரும்பினார்கள், தோல் சிவந்த பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்து பிள்ளை குட்டி பெற்றுக் கொள்ள விரும்பினார்கள். நேரங் கிடைத்த நேரத்தில் ஓயாத அலைகள் வீடியோக் கேசட்டை வீட்டு வரவேற்பறையில் பார்த்தபடி தாக்குதல் திட்டங்களைக் கூடத் தீட்டினார்கள், தமிழீழத்தையும் விரும்பினார்கள்.

இயக்கம் முதலில் மக்கள் போராட்டத்திற்கு என்ன விதமாகவும் பங்களிப்புச் செய்யலாம் உதாரணத்துக்கு காசு தாறவை காசு தரலாம், போராட வாறவை போராட வரலாம், தோசை சுட்டுத்தாறவை தோசை சுட்டுத் தரலாம் எண்டு சொன்னபோது. அனேகம் பேர் புத்திசாலித்தனமா போராடப் போன ஆற்றையேனும் பிள்ளையளுக்கு பசியாத்தும் புனிதப்பணியைச் செய்து, முடிஞ்சா சாப்பிட்டவன்ர நாக்கில இருந்து சுவை மறைய முதல் நைசா ஒரு பிணையில்லாத பாசுக்கு அப்பிளிக்கேசனைப் போட்ட ஆக்கள்தான்.

அதே தமிழர்கள்தானே இன்றும் உள்ளவர்கள். கணனித் திரைகளிற்குட்பட்ட போராட்டங்களைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். இதனால்தான் இவை மக்கள் போராட்டங்கள் அல்ல, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போராட்டம் என்கிறேன்.

பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். அவர்கள் மக்கள் தான் ஆனால் என்னுடைய குடும்ப உறுப்பினருக்காக நான் போராடுவது வேறு? என்னுடைய சக மனிதனின் பிரச்சினையை உணர்ந்து அவனுக்காக தானும் களத்தில் இறங்குவது வேறு.

இங்கே இந்தப் போராட்டங்களில் அரசுக்கு எதிராகக் கொடிபிடித்த, கோசம் போட்ட ஒரு பக்கத்து வீட்டுக்காரனையாவது காட்டமுடியாது என்பதே நிதர்சனம். தனக்கு நிகழும் வரை காத்திருந்து காத்திருந்தே நந்திக்கடலில் கைவிடப்பட்ட எக்கச்சக்கம் கனவுகள் தான் நினைவுக்கு வருகிறது.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல கொஞ்சம் பாதிக்கப்பட்டவர்கள், கொஞ்சம் ஊடகவியலாளர்கள், நிறைய அரசியல்வாதிகள் மற்றும் புலனாய்வுத்துறையினர்தானே எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொள்கிறார்கள். (சில இடங்களில் போராட்டத்துக்கு வருகிற மக்கள் எண்ணிக்கையை விடவும் புலனாய்வாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதாக அலுத்துக்கொண்டார் ஒரு ஊடகவியலாளர்)

கடந்த ஐந்து வருடங்களில் நடந்த இந்த ஜனநாயகவழிப் போராட்டங்கள் ஒன்றிலாவது, நான் குறிப்பிட்ட தரப்பை விட வேறு யாராவது கலந்து கொண்டதை உங்களால் அடையாளம் காட்ட முடியுமா? வடக்கில் எத்தனை கிராமச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு அமைப்புக்கள், சமூக நோக்கமுடைய அமைப்புக்கள்,தொழிற் சங்கங்கள் உள்ளன. இவர்களில் யாராவது போராட்டங்களில் கலந்து கொண்டார்களா?

வருடாந்தம், ஊர்க்கோயில் திருவிழா, நல்லூர்த் திருவிழா, பெறாமக்களின் சாமத்திய சடங்கு, கலியாணவீடு என் எத்தனை தமிழர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து செல்கிறார்கள். அவர்களில் யாராவது போராட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு சென்றார்களா?

எந்தக்காணாமல் போனவர்கள் போராட்டத்திலாவது, காணாமல்போனவர்களின் பக்கத்து வீட்டுக்காரர் கலந்து கொண்டார்களா? **(18ஆம் பக்கம் பார்க்க)**

# உயர்தரப்பரீட்சை வினாத்தாளில் குளறுபடி
# விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

2014ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை வினாத்தாள் குளறுபடி தொடர்பில் விசாரணை நடாத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பொருளியல் வினாத தாளில் குளறுபடிகள் காணப்பட்டதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

லண்டன் உயர்தரப் பரீட்சையின் கடந்த கால வினாத் தாள்களின் கேள்விகள் அப்படியே பிரதி செய்யப்பட்டு 2013 ஆம் ஆண்டுக்கான பரீட்சை வினாத்தாளில் உள்ளடக்கப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வினாத்தாள் தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கு உத்தரவிட்டுள்ளார்.



2007ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் லண்டன் உயர்தரப் பரீட்சை வினாத் தாள்களில் உள்ளடக்கப்பட்டிருந்த 21 வினாக்கள், கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் பொருளியல் வினாத் தாளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பான ஆதாரங்களையும் சில ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

வினாத்தாள் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி ஒருவார காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, பரீட்சைகள் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை பொருளியல் வினாத்தாளிலும் பிரச்சினைகள் காணப்படுவதாக சில ஆசிரியர் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து அறிக்கை அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் கோரியுள்ளார்.

## - லசந்த கொலை விவகாரம் -
# உண்மையான சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை



### பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவு தகவல்

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலையுடன் தொர்டரபுடைய உண்மையான சந்தேக நபரை இன்னமும் கைது செய்யவில்லை என பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு நீதிமன்றில் அறிவித்துள்ளது.

சந்தேக நபரை கைது செய்யும் நோக்கில் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக கல்கிஸ்ஸ நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அத்திட்டிய என்னும் இடத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய் நபர்கள் லசந்தவை கொலை செய்திருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த நுவரெலியா பிரதேசத்தின் கராஜ் ஒன்றின் உரிமையாளரான பிச்சை ஜேசுதாஸ் என்பவர் தடுப்புக் காவலில் இருக்கையிலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றுமொரு சந்தேக நபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் கந்தேகெதர பியவன்ச என்பவரை சட்ட மா அதிபர் விடுதலை செய்துள்ளார்.

இதேவேளை, சிரேஸ்ட ஊடகவியலாளர் ஒருவர் பட்டப்பகலில் சுட்டுக் கொலை செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகியும் இதுவரையில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என லசந்தவின் குடும்பத்தார் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அண்மையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதவான், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# காணாமற்போனோர் குடும்பங்களின் தேவைகள் குறித்து கணக்கெடுப்பு

(கொழும்பு)

காணாமற் போனோரின் குடும்பங்களின் தேவைகள் தொடர்பில் தரவுகளை சேகரிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி குறித்த வேலைத்திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இந்தப் பணிகளை ஒரு வருடத்துக்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசிடம் தமது யோசனையை சமர்ப்பித்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை காணாமற் போனோர் தொடர்பான விசாரணைக் குழு, மன்னார் மாவட்டத்தில் முன்னெடுத்துள்ள முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடையவுள்ளன எனத் தெரிவிககப்படுகிறது.

# இலங்கையிலுள்ள தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் அமெரிக்கா

மேற்குலகிற்கு எதிரான உணர்வுகள் இலங்கையில் தீவிரமடைவதற்கான வாய்ப்புள்ளதால் தனது பிரஜைகளை மிகக் கவனத்துடன் இருக்குமாறு அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கையில் உள்ள அமெரிக்க பிரஜைகளுக்கான எச்சரிக்கையொன்றை அமெரிக்கா விடுத்துள்ளது. அந்த எச்சரிக்கையில், இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகள் அதிகரித்துள்ளன. ஐ.நா. மற்றும் மேற்குலகுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், காஸா நிலைவரம், சிவில் சமூகத்தினருக்கு எதிரான நெருக்கடிகள், பத்திரிகையாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் போன்றன இலங்கையில் அதிகரித்துள்ளன.

அத்துடன், அமெரிக்க நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் போன்றவற்றுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் நடாததப்படுகின்றன.

எனவே, இலங்கையில் உள்ள அமெரிக்கப் பிரஜைகள் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் பகுதிகளைத் தவிர்ப்பதுடன், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் பகுதிகளில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அமெரிக்கா கோரியுள்ளது.

# போதைப் பொருள் வர்த்தகத்துடன் மூன்று அமைச்சர்களுக்கு தொடர்பு

## பொதுபலசேனா குற்றச்சாட்டு



இலங்கையில் நடைபெறும் பாரியளவிலான போதைப் பொருள் மற்றும் மதுபான வர்த்தகத்துடன் அமைச்சர்கள் தொடர்புபட்டிருப்பதாக பொது பலசேனா அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பாரியளவிலான போதைப் பொருள் வர்த்தகத்துடன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மூன்று பேரும், ஒரு மாகாண சபை அமைச்சரும் தொடர்புபட்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவர்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் ஞானசார தேரர் எச்சரித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் சட்டவிரோத எதனோல் (மதுபான மூலப்பொருள்) வர்த்தகத்துடன் தொடர்புடைய மூன்று அமைச்சர்கள் தொடர்பாகவும் எங்களுக்கு தகவல்கள் கிடைததுள்ளன.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பாக எங்களுக்கு தகவல் தரும் நபரொருவரை அமைசசர் ஒருவரின் புத்திரர் மிரட்டியுள்ளார். அது தொடர்பில் நாங்கள் விரைவில் சட்டரீதியான நடவடிககைகளை எடுக்கவுள்ளோம் என்றும் ஞானசார தேரர் தெரிவிததுள்ளார்.

# நாட்டில் நிலவும் கடும் வறட்சி; 16 இலட்சம் மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

ஆறு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியினால் 16 இலடசத்து 20 ஆயிரத்து 600 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித துள்ளது.

நான்கு இலட்சத்து 68 ஆயிரத்து 329 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, தென் மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களே வறட்சியினால் பெரிதும் பாதிக்கபட்டுள்ளன.

இதேவேளை, வறட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு இலட்சத்து 52 ஆயிரத்து 673 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மொனராகலை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 193 பேரும், பொலனறுவை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 439 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிபபிட்டுள்ளது.

மேலும், வறட்சியினால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை குறித்து இடர் முகாமைத்துவத்தின் அதிகாரிகள் முரணான கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

இதன்படி, வறட்சியினால் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிடுகின்றார்.

எனினும், வறட்சியினால் 15 இலட்சம் பேர பாதிக்கப்பட்டுள்ள



தாக இடர் முகாமைத்துவ அமைசசர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வற்ட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வறட்சி நிவாரணத்தை வழங்குவதற்காக இரண்டாயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் வானிலையில் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# பொலிஸாரின் நடவடிக்கை அதிருப்தி கொள்கிறது கபே

(கொழும்பு)

பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்த பொலிஸா நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் செயற்றிறன் இன்மையினால் ஊவா மாகாணத்தில் சட்டம் ஒழுங்கினை பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்படக்கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஹியங்கனை பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரை பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்த எடுக்கப்பட்ட தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் பிரதித் தேர்தல் ஆணையாளருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படும் ஓர் நிலைமையே தற்போது நாட்டில் காணப் படுவதாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதி மீறல்களைக் கட்டுப்படுத்த தேர்தல் திணைக்களத்தினால் முடியவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பதுளை மற்றும் மொனராகல் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான, சட்டவிரோத தேர்தல் பிரசாரப் பொருட்களை காண முடிவதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை உரிய முறையில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குறைபாடுகளுடன் ஆசிரியர் கலாசாலை

# நெருக்கடியில் புதுமுக மாணவர்கள்

(திருநெல்வேலி)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பல பற்றக்குறைகள் காணப்படுவதினால் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆசிரிய மாணவர்கள் பலரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

649 தமிழ் முஸ்லிம் மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெறுவதற்காக இக்கலாசாலையில் இவ்வருடம் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இம் மாணவர் தொகையானது கலாசாலையின் வரலாற்றில் மிக அதிகமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு விடுதி வசதிகள் கலாசாலையில் இல்லை. விடுதிகளின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதால் மாணவர்கள் அனைவரும் கலாசாலைக்கு வெளியேறி தமது தங்குமிடம் உணவு வசதிகளை செய்து கொள்ள வேண்டி உள்ளது.

விரிவுரையாளர் பற்றாக் குறை ஒருபெரும் குறையாக வுள்ளது. 11 விரிவுரையாளர்கள் மேலதிகமாகத் தேவைப்படுகின்றனர். இதுபற்றிக் கல்வியமைச்சுக்கும் வடமாகாண சபைக்கும் தெரியப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது. 649 மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களைக் குறைவாக வைத்தவாறு கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வது என்பது இயலாத காரியமாகவுள்ளது.

சமையலாளர் விடதி மேற்பார்வையாளர் மேற்றன் போன்றவர்களுக்கான ஆளணியும் காணப்படவில்லை நிகழ்வுகள் நடைபெறும் ரதிலட்ஷ்மி மண்டபம் 450 பேர்களுக்கு மட்டுமே போதுமானதாகும். ஆனால் 649 மாணவர்களை உள்ளடக்கி இம் மண்டபத்தில் நிகழ்வுகளை நடாத்த முடியாமையால் மாணவர்கள் பெரும் நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது.

இக்குறைபாடுகள் தீர்க்கப்பட்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் குறைகள் எதுவுமின்றித் தமது கல்விப் பயிற்சியைத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்டவர்கள் எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது

(137)

## குடிநீருக்கு தட்டுப்பாடு

(கோப்பாய்)

வலி. கிழக்கு பிரதேசத்திலுள்ள குளங்கள் பல வற்றில் தண்ணீர் முழுமையாவற்றியுள்ளது தரவை நிலங்கள் வறட்சியடைந்ததாலும் கால் நடைகள் தண்ணீர் இல்லாமல் பெரும் பாதிப்படைந்துள்ளன.

தற்போது கடும் வறட்சி, வெப்பம், மழையின்மையால் தரவை நிலங்கள் வறண்டு காணப்படுகின்றன.

குளங்களில் தண்ணீர் இன்மையால் கால்நடைகள் உணவுகள் இன்றி அலைந்து திரிவதைக்காண முடிகின்றது இதேபோல விவசாயப்பிரதேசங்களின் கிணறுகளிலும் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருவதால் விவசாயிகளும் தாம் பாதிக்கப்படலாம் என அச்சம் அடைந்துள்ளனர். (08)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறு முக நாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் 12 ஆம் திருவிழாவான இன்று, நாலாயிரம் கண் படைத்தவனே என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் சிறப்புச் சொற்பொழி வாற்றுவவார்.

தொடர்ந்து இணுவில் இளந் தொண்டர் சபை, வடலியடைப்பு இந்து இளைஞர், ஊர்காவற்றுறை ஸ்ரீ முத்துமாரி அம்மன், நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

* * * *

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசை யரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் 12 ஆம் நாளான இன்று கீதவாகினி இசைக் கல்லூரி மாணவிகள் வழங்கும் வாய்ப் பாட்டு இசை திருமதி அம்பிகை பாலகுமார் பாட்டு இசையரங்கம் பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளன.

## முரசின் இன்றைய பலன்




(12.06.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 27 ஆம் திகதி.
துதியை /மரணயோகம்.
சதய நட்சத்திரம் மு.இ. 09.10 வரை. பின் புரட்டாதி வரை.
இராகு காலம் 03.04 - 04.34 வரை. சுபநேரம் 10.34 - 12.04 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சீதனப் பிரச்சினை காரணமாக மருமகள்–மாமியார் உறவில் முரண்பாடு ஏற்பட்டு சமாதான நிலைக்கு வருதல், உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து நடந்து கொண்டால் வேலைப் பளுவினைக் குறைத்துக் கொள்ளலாம். |
| ரிஷபம் | எதிர்பாராத பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் அதன் மூலம் சிறிய அனுகூலத்தைப் பெறல், வெளி வட்டாரத் தொடர்புகளால் பெயரும் புகழும் ஏற்பட்டு மதிக்கப்படல் |
| மிதுனம் | வைத்தியர்களாலும் குணப்படுத்த முடியாத நோயினை யோகப்பயிற்சியினால் மாற்றிவிடல், எதர்பாராத செலவீனங்களும் வீண் அலைச்சலும் அகால போஜனமும் ஏற்படும் |
| கடகம் | உடல் ஆரோக்கியத்தில் கவனம் எடுக்காவிழன் தேக நலம் பாதிக்கப்படலாம், கொடுக்கல் வாங்கல் இருப்பதுடன், பழைய நிலுவைகளும் வந்தடையும் |
| சிம்மம் | பொறுப்பின்றி கொடுத்த கடனினைப்பெற பலமுறை அலைந்து கிடைக்காமல் இருப்பதை எண்ணி தெய்வத்திடம் முறையிடல், எதிலும் எதிர் நீச்சல் போட்டுத்தான் முன்னேற முடியும் என்பதைக் கைக்கொண்டு காரியத்தில் இறங்குதல் |
| கன்னி | வர்த்தகர்கள் நிறைய போட்டிகளையும் சவால்களையும் மறைமுக எதிர்ப்புக்களையும் சந்திப்பர், மாலை ஆசிரியர்களின் உறவுத் தொடர்புகள் சுமூக நிலையில் இருக்கும் |
| துலாம் | வெளியூர் பயணம் இடைத்தங்கல நாட்டில் இறக்கிய நிலை கண்டு மனச் சஞ்சலமடைதல், குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகள் பெற்றுக் கொள்ள கடன்படும் நிலை ஏற்படும். |
| விருச்சிகம் | உங்கள் திறமை, நற்குணங்களை எதிரிகளும் பாராட்டி உறவுக்கு கை கொடுப்பார்கள், வீண் விவகாரங்களில் ஈடுபட்டு உங்கள் நற்பெயரைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் |
| தனுசு | விளம்பரத்தில் வேலைவாய்ப்புப் பற்றி சந்தேக மேற்பட்டதனால் கைவிட எண்ணமிடல், பிறருக்கு உதவி செய்யும் அமைப்பில் சேர்ந்து ஆத்மிக பணிகளில் ஈடுபடுவீர்கள் |
| மகரம் | இதுவரை தடைப்பட்டு குறுக்கீடுகள் இருந்த காரியங்கள் சித்தி நிலைக்கு நகரும், உற்றார் உறவினர்கள் சகபாடிகளின் அன்பும் ஆதரவும் கிட்டி மனதில் வேதனை குறையும் |
| கும்பம் | நீண்ட காலம் குழந்தைப் பாக்கியமின்றிய நிலையில் பிறர் பிள்ளையை தத்தெடுக்க முயலுதல் தொழில் மற்றும் வியாரத்தில் நண்பர்கள் தக்க சம்யத்தில் உதவிக்கரம் கொடுப்பார்கள் |
| மீனம் | வெளியூர் பயணம் பற்றிய இனிய செய்தி கிட்டி பரவசப் படுத்தும், உடன் பணியாற்றுபவர்களின் ஒத்துழைப்பினால் வேலைப் பளு வெகுவாகக் குறைந்துவிடும் |

## நல்லைக் கந்தனுக்கு இன்று 12 ஆம் திருவிழா



### பாடிப் பணிந்தோம்!

நல்லூர் கதிர்காமம் சந்நிதிமா விட்டபுரம்
எல்லாமே ஈழத்திருத்தலங்காண்-நல்லூரே
ஆண்ட தமிழர் பரம்பரையின் அற்புதங்கள்
பூண்டதல மென்பார் புகழ்ந்து

செய்யும் தொழில்சிறக்கும் செவ்வேளின் செல்வாக்கால்
எய்தும் பெருமை எழில்கூடும்-மெய்வருத்ததந்
தீருந் திருவருளுந் தேங்குவதை நல்லூரிற்
பாருங்கள் பாடிப் பணிந்து.

-நல்லூர் கந்தன் பாமாலை-

### பள்ளி எழுந்தருள்க!

சங்கமொலிப்ப தலைவா நீ
இங்கு துயில் எழுந்து பார்
பார் நிறைந்த பரம்பொருளே
கார் நிறைந்த கரும் குழலி வள்ளி
அம்மையொடு காலைதுயில் எழுந்துவா
பார்முழுதும் நின் புகழ் ஓங்க
தெம் மாங்கு இசை யொடு வண்டினமும்
இசைபாட தேவனே பள்ளி எழுந்தருள்க!

-மண்டைதீவு மகிழ்நன்-

### நீதிக்கு வரம் தா!

களவெடுப்பவனும் கும்பிட வருகின்றான்-முருகா!
களவெடுத்தவனும் கும்பிட வருகின்றான்
கலகம் விளைவிப்பவனும் கும்பிட வருகின்றான்
கசிப்பு விற்பவனும் கும்பிட வருகிறான் என்செய்வேன்?

எழும் ஆசைகளோடும் எழுந்து வருகிறார்கள்
எண்ணற்ற இழப்புகளோடும் இறைஞ்ச வருகிறார்கள்
கொழும்பு, லண்டன், கனடாவிலிருந்தும் வருகிறார்கள்
கோடி மாடி என்ன, குமரா நீதிக்கு வரம் தா?

கே.எஸ்.சிவஞானராஜா

### கந்தனுக்கு அரோகரா!

முத்துக் குமரனூர் விழாக் கோலம் பூனட்டும்
வித்தகக் கந்தனுக்கு வெற்றி விழா நடக்கட்டும்
தித்திக்கும் தமிழாலே கவிதைமழை சிந்தட்டும்
நித்தம் அவனெமக்கு நிம்மதியை வழங்கட்டும்
சித்தம் அவனடியில் சிதறாமல் நிலைக்கட்டும்
யுத்தம் புதுவுலகை புவியிலவன் படைக்கட்டும்
உத்தம வாழ்வையவன் எல்லோற்கும் வழங்கட்டும்
சத்தமெலாம் கந்தனுக்கு அரோகராவென முழங்கட்டும்.

ஆசுகவி- செ.சிவசுப்பிரமணியம் மூளாய்

### அருள் மழை பொழிபவனே!

காவடிக் கந்தனாக கதிர்காமத்திலமர்ந்து
பரிவுடனே வேண்டும் வரமருளும்-கந்தா
அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரமமர்ந்து
கருணையுடன் அருள்மழை பொழியும்-கடம்பா
அன்னதானக் கந்தனாக சந்நிதியில் நியமர்ந்து
அண்டினோர் பசி போக்கும்-கார்த்திகேயா
அலங்காரக் கந்தனாக நல்லூரில் நியமர்ந்து
பக்தர்கள் குறை தீர்க்கும்-கார்மயில் வாகனா
பாரினில் இதுவரை நாம்பட்ட துன்பம் போதும்
எம்மக்கள் நலம் காக்க எழுந்தோடி வாராயோ

க.கனகசபை சண்டிலிப்பாய்

# அக்காவிடம் மண்டியிட்ட செரீனா



(ரொராண்ரோ)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், தனது சகோதரியும் முதல் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்சை (அமெரிக்கா) வீழ்த்தி அசத்தினார் வீனஸ் வில்லியம்ஸ்.

மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், முதல் செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. இரு வீராங்கனைகளும் தங்கள் சேர் வீசில் புள்ளிகளைக் குவித்ததால் டை பிரேக்கர் வரை இழுபறியாக நீடித்த இந்த செட்டில் செரீனா 7-6 (7-2) என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார்.

எனினும், அடுத்த 2 செட்களிலும் அதிரடியாக விளையாடி பதிலடி கொடுத்த வீனஸ் வில்லியம்ஸ் 6-7 (2-7), 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இருவரும் நேருக்கு நேர் மோதிய 25 ஆட்டங்களில், வீனஸ் 11ஆவது வெற்றியைப் பதிவு செய்தார். மற்றொரு அரையிறுதியில் போலந்து வீராங்கனை அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா 7-6 (7-1), 7-6 (7-3) என்ற நேர் செட்களில் எகடரினா மகரோவாவை (ரஷ்யா) கடுமையாகப் போராடி வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். இறுதிப் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் - அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா மோதவுள்ளனர்.

# நீச்சலில் சாதனை




(இர்வின்)

அமெரிக்காவில் நடைபெற்ற தேசிய நீச்சல் சம்பியன்ஷிப், 400 மீற்றர் "பிரீஸ் டைல்" பிரிவில், அமெரிக்க வீராங்கனை கேட்டி லிடெக்கி, உலக சாதனை படைத்தார்.

அமெரிக்காவில் உள்ள இர்வின் நகரில், தேசிய நீச்சல் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன.இதில் பெண்களுக்கான 400 மீற்றர் பிரீஸ்டைல் பிரிவில், பந்தய தூரத்தை மூன்று நிமிடம், 58.86 வினாடிகளில் கடந்த அமெரிக்காவின் கேட்டி லிடெக்கி, முதலிடம் பிடித்து புதிய உலக சாதனை படைத்தார். இதன்மூலம், இத்தாலி வீராங்கனை பெடரிகா பெல்லிகிரினியின் (3 நிமிடம், 59.15 வினாடி, 2009) முந்தைய சாதனை முறியடிக்கப்பட்டது.

முன்னதாக நடைபெற்ற தகுதிச் சுற்றில், கேட்டி லிடெக்கி, பந்தய தூரத்தை 3 நிமிடம், 59.89 வினாடிகளில் கடந்தார். இதன்மூலம் 400 மீ., பிரீஸ்டைல் பிரிவில்,பந்தய தூரத்தை 4 நிமிடங்களுக்குள் இரண்டு முறை கடந்த முதல் வீராங்கனை என்ற பெருமை பெற்றார்.

கேட்டி லிடெக்கி, கடந்த ஜூன் மாதம் அமெரிக்காவில் நடைபெற்ற சிறுவர்களுக்கான 800, 1500 மீ., பிரீஸ்டைல் பிரிவுகளில், இரண்டு உலக சாதனை படைத்தார். இதன்மூலம் முன்னாள் அமெரிக்க வீராங்கனை ஜனட் ஈவன்சுக்கு பின், நீச்சல் போட்டியில் மூன்று (400, 800, 1500 மீற்றர், பிரீஸ்டைல்) உலக சாதனை படைத்த வீராங்கனை என்ற பெருமை பெற்றார்.




## வலுவான நிலையில் தென்னாபிரிக்கா

(ஹராரே)

சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வலுவான அணியை அடைந்துள்ளது. சிம்பாப்வே சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, ஒரே ஒரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. ஹராரேவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் இனிங்ஸில் சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் தென்னாபிரிக்க அணி எல்கர், டுபிளிசர் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் மதிய போசன இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை தென்னாபிரிக்க அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 324 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எல்கர் 61, டு .குயின்டன் கொக் 80, டு பிளசர் 98 ஓட்டங்களைப்பெற்றனர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# அஜ்மல் பந்துவீச்சில் சந்தேகம்



(காலி)

பாகிஸ்தான் அணயின் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் பந்துவீசும் முறை தவறாக உள்ளதாக சர்ச்சை எழுந்துள்ளது.

பாகிஸ்தான் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் காலியில் நிறைவடைந்தது. இப்போட்டியில் சயிட் அஜ்மல் வீசிய பந்துகள் குறித்து போட்டியில் பணி புரிந்த அதிகாரிகள் சந்தேகத்தை எழுப்பியுள்ளனர்.

ஐ.சி.சி. விதிப்படி 21 நாட்களுக்குள் சயிட் அஜ்மல் சோதனையை சந்திக்க வேண்டும். எனினும் அதுவரை அவர் போட்டிகளில் கலந்து கொள்ளலாம் என்று ஐ.சி.சி. கூறியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு அஜ்மலின் தூஸ்ரா பந்துவீச்சில் சர்ச்சை எழுந்தது. ஆனால் சோதனைக்கு பின் அந்த சர்ச்சையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காதல் ஆட்டத்திற்கு சம்மதமா?

ரென்னிஸ் நட்சத்திரங்களான மரியா ஷரபோவா, இவரது காதலர் கிரிகர் டிமிட்ரோவ் இணைந்து, ஏன் கலப்பு இரட்டையர் போட்டிகளில் பங்கேற்கக் கூடாது என்ற கேள்வி எழுந்துள்ளது.

ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா, கிராண்ட்லாம் தொடர்களில் 5 முறை பட்டம் வென்றுள்ளார். சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் 6ஆவது இடத்திலுள்ளார்.

பெரும்பாலும் ஒற்றையரில் மட்டும் கவனம் செலுத்தும் ஷரபோவா, கடந்த அவுஸ்ரேலிய ஓப்பனில் 2003, 2004, யு.எஸ்., ஓபனில் 2003 என, மூன்று முறை பெண்கள் இரட்டையரில் பங்கேற்றார்.

இதில் 2ஆவது சுற்றினை தாண்டாத ஷரபோவா, கடந்த 2004இல் யு.எஸ்., ஓப்பன் தொடரில் கலப்பு இரட்டையரில் பெலாரசின் மேக்ஸ் மிர்னியுடன் விளையாடி, காலிறுதிக்கு முன்னேறினார்.

ஷரபோவாவின் காதலர் கிரிகர் டிமிட்ரோவ், பல்கேரிய ரென்னிஸ் வீரர். உலகின் எட்டாம் நிலை வீரர். களத்தில் இருவரும் இணைந்து பயிற்சியில் ஈடுபடுவர்.

இதனிடையே, ரென்னிஸ் அரங்கில் முதல் நிலையிலுள்ள இவர்கள் இருவரும் இணைந்து, கலப்பு இரட்டையர் போட்டிகளில் ஏன் பங்கேற்கக் கூடாது என்று கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து ஷரபோவா கூறிப்பிடுகையில், பொதுவாக பயிற்சியின் போது இருவரும் இணைந்து தான் செயற்படுகிறோம். கலப்பு இரட்டையரில் பங்கேற்பது குறித்து, டிமிட்ரோவ் என்னிடம் கேட்டுள்ளார். கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் இதை பெரும்பாலும் நான் விரும்புவதில்லை. என்னை விட அவர் திறமையான வீரர். அவருடன் விளையாடி எனக்கு நானே தவறு செய்து கொள்ள விருப்பம் இல்லை என்றார்.



# ஆனந்தக் கண்ணீர்

(காலி)

காலியில் நேற்று முன்தினம் நிறைவடைந்த பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன ஆனந்தக் கண்ணீர் பொழிந்து வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

பாகிஸ்தான் தொடருடன் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ள மஹேல ஜெயவர்த்தன நேற்று முன்தினம் காலியில் இறுதி டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய முதல் இனிங்ஸில் 59, இரண்டாவது இனிங்ஸில் 25 ஓட்டங்களைப் பெற்று அசத்தினார்.

இப்போட்டியில் வெற்றிபெற்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. முதல் நான்கு நாட்களும் போட்டி வெற்றி தோல்வியற்ற நிலையையே எட்டும் என்ற கணிப்பே அதிகம் இருந்தது. ஆனால், ஹேரத் ஜாலம் செய்து பாகிஸ்தான் வீரர்களை சாய்த்து அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். உண்மையில் அவரின் இந்த கடின உழைப்பு என்னையும் கௌரவப்படுத்தியிருக்கின்றது. இந்த வெற்றி அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த சிறந்த பரிசு. எனது எதிர்காலம் குறித்து திட்டவட்டமாக உடனடியாக எதனையும் கூற முடியவில்லை. விரைவில் இது குறித்து அறிவிப்பேன் என மஹேல தெரிவித்தார்.

# பயிற்சியாளர் விண்ணப்பம்; வெளிநாட்டவர் ஆதிக்கம்

## இலங்கை கிரிக்கெட் சபை தகவல்

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்காக விண்ணப்பித்துள்ள அனைவரும் வெளிநாட்டவர்களாக உள்ளனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அத்தப்பத்து இப்பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை.

இலங்கை கிரிக்கெட் அணிக்கு தலைமைப் பயிற்றுவிப்பாளர், களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர், அணி உடல் இயக்க பயிற்றுவிப்பாளர் ஆகியோருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தன.

தலைமைப் பயிற்றுவிப்பாளருக்கான பதவிக்கு 13 பேர் விண்ணப்பித்துள்ளனர். இலங்கை சார்ந்த எவரும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை. மார்வன் அத்தப்பத்துக்கு குறித்த பதவி வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் அதிகம் இருந்தன. ஆனால் அவர் குறித்த பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை. இதை இலங்கை கிரிக்கெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா உறுதி செய்துள்ளார்.

தென்னாபிரிக்காவுடன் சம்மந்தப்பட்ட ஐந்து பேர் இந்தப் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர். தென்னாபிரிக்காவின் முன்னாள் பயிற்றுவிப்பாளர்கள் மைக்கி ஆதர், ரே ஜென்னிங்ஸ், எரிக் சிம்மொன்ஸ், தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரர் குளுஸ்னர் ஆகியோருடன் இங்கிலாந்து தொடரில் இலங்கை அணிக்கு ஆலோசராக செயற்பட்ட க்றிஸ் அடம்ஸ், அவுஸ்ரேலியா அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளர் கிரேக் மக்டெமொட், இலங்கை அணியின் உறுதி மற்றும் அதை பேணும் பயிற்சிகளை வழங்கிய அவுஸ்ரேலியாவை சேர்ந்த ஷேன் டப், தென்னாபிரிக்காவின் திறமைக்கான பணிப்பாளர் பட்டி அப்டன், முன்னாள் இந்திய சுழல்ப் பந்து வீச்சாளர் ஆஷிஸ் கபூர், நியூசிலாந்து முன்னாள் பயிற்றுவிப்பாளரும், ஆப்கானிஸ்தான் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளருமான அன்டி மோல்ஸ், இங்கிலாந்து முன்னாள் வீரர் மல் லோயி, விக்டோரியா கழகத்தின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் சிமொன் ஹெல்மொட், சமொசெட் கழகத்தின் கிரிக்கெட் பணிப்பாளர் டேவ் நொஸ்வேர்த்தி ஆகியோர் விண்ணப்பித்த 13 பேரும் ஆவர்.

களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர் பதவிக்கு மனோஜ் அபய விக்கிரம என்பவர் இலங்கை சார்பாக விண்ணப்பித்துள்ளார். மற்றவர்கள் 11 பேரும் வெளிநாட்டவர்கள். இலங்கையர்கள் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்காமை இலங்கை கிரிக்கெட் வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவரை நோக்கி செல்லும் என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. விண்ணப்பித்துள்ளவர்களில் சிலர் பயிற்றுவிப்பாளர் பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை ஓரிருவர் ஆலோசகர் பதவிகளையும் பெற்றுக் கொள்வார்கள் என இலங்கை கிரிக்கெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா கூறியுள்ளார்.

# முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு விழா



அளவெட்டி தெற்கு மகாஜன சபை ஈஸ்வரன் முன்பள்ளி



கரவெட்டி கோட்டமட்ட முன்பள்ளி (48)



புத்தூர் மேற்கு நவக்கிரி சரஸ்வதி முன்பள்ளி



இணுவில் பொதுநூலகம் பாலர் பாடசாலை (48)



வதிரி தமிழ் மன்ற முன்பள்ளி (48)



சில்லாலை தூய கதிரைமாதா முன்பள்ளி (48)

# சுரேஸ் பிரேமச்சந்திரன் போட்டுடைத்த உண்மை!



அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டு தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கப் போவதாகத் தெரிவித்திருந்தார்.

பிரேமச்சந்திரன் விட்ட இந்தப் புதிய "வாணம்" குறித்து தமிழ்த் அரசியல் வட்டாரங்களோ அல்லது தமிழ்ப் பொதுமக்களோ "அலட்டி"க் கொண்டதாகவோ, அக்கறை செலுத்தியதாகவோ தெரியவில்லை. குறைந்த பட்சம் அவரது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் கூட இதுபற்றி எதுவும் கருத்துக் கூறியதாக இல்லை.

அதற்குக் காரணம் பிரேமச்சந்திரன் வழமையாக இத்தகைய வெற்று வேட்டுகளை ஊடகங்களுக்கு விடுத்து வருபவர் என்ற அலட்சியம் ஒரு காரணமாக இருக்கலாம். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இப்படியான ஒரு தீர்மானம் எடுக்காத நிலையில் தேவையில்லாமல் இதுபற்றி அபிப்பிராயம் கூறி ஏன் வீணாக மூக்கை உடைத்துக் கொள்ளுவான் என்ற காரணமாயும் இருக்கலாம்.

இருப்பினும் பிரேமச்சந்திரனின் கூற்று ஒரு உண்மையைப் போட்டு உடைத்திருக்கிறது. அதாவது அவரின் கூற்றின்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக தற்பொழுது தீர்வுத் திட்டம் எதுவும் இல்லை என்ற உண்மையை அவர் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். அது கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்.

இலங்கைத் தமிழரின் வரலாற்றில் நாடு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் அடைந்த காலம் முதல் பாராளுமன்றவாத அடிப்படையில் செயற்பட்ட பல தமிழ்த் கட்சிகள் வந்து போயிருக்கின்றன. முதலில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உருவானது. அது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை முன்வைத்தது. 70 வீதம் சிங்கள மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் அது கொஞ்சம் கூட நடைமுறைச்சாத்தியம் இல்லாததால், அது வந்த வழியாலேயே திரும்பிப் போய்விட்டது.

அதன் பின்னர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சி உருவானது. அது தனது கொள்கையாக சமஸ்டி தீர்வை முன்வைத்தது. அக்கட்சி எதிர்பார்த்த அளவுக்கு இல்லாவிட்டாலும், தமிழரசுக் கட்சி எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் அரசாங்கத்துடன் செய்து கொண்ட "பண்டா - செல்வா ஒப்பந்தம்" ஓரளவுக்கு சமஸ்டி அடிப்படையைக் கொண்டிருந்தது. ஆனால் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தவிடாமல் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான சிங்கள இனவாத சக்திகள் கிளர்ச்சி செய்ததால், அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

அதன் பின்னர் தமிழரசு - தமிழ் காங்கிரஸ் - தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - ஐ.தே.க.வைச் சேர்ந்த கே.டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் சேர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (தமிழர் விடுதலைக் கூட்டணி) என்ற அமைப்பை உருவாக்கினர். அந்த முன்னணி 1976இல் வட்டுக்கோட்டையில் ஒரு மாநாட்டைக் கூட்டி தமிழர் பிரச்சினைக்கு "தமிழீழம்" என்ற தனி நாடுதான் தீர்வு எனத் தீர்மானித்தது. அந்தக் கொள்கையை ஒத்துக்கொள்ளாத தொண்டமானும், தேவநாயகமும் அதிலிருந்த விலகிச் சென்றனர்.

அந்தக் கொள்கையின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலிருந்த 18 தேர்தல் தொகுதிகளிலும் 1977 தேர்தலில் அமோக வெற்றி பெற்றது. ஆனால் தனிநாட்டுக் கொள்கைக்காகப் போராடாமல் அன்றைய ஜே.ஆர். அரசாங்கத்துடன் கூடிக்குலாவ ஆரம்பித்தது. அதனால் கூட்டணி மீது நம்பிக்கை இழந்த தமிழ் இளைஞர்கள் தனிநாட்டு இலட்சியத்துக்காக பல்வேறு ஆயுதக் குழுக்களை அமைத்து போராட ஆரம்பித்தனர்.

இளைஞர் இயக்கங்களின் ஆயுதப் போராட்டத்தை ஜே.ஆரின் அரசு [illegible] வெள்ளத்தில் மூழ்கடிக்க இருந்த தருணத்தில் இந்திய அரசு தலையிட்டு "இந்திய - இலங்கை ஒப்பந்தம்" மூலம் ஐக்கிய இலங்கைக்குள் மாகாணசபைகள் மூலம் அதிகாரத்தைப் பகிரும்

---

"மதம் கொண்ட யானை என்ன செய்யும் தெரியுமா?"

"சினம் கொண்ட சிங்கத்திடம் தோற்று ஓடிப் போகும்."


இது ஆயிரத்தில் ஒருவன் படத்தில் நம்பியாருக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையே வாள் வீச்சுக்கு முன் நடக்கும் வாய் வீச்சு. எம்.ஜி.ஆர். சினம் கொண்ட வெற்றிச் சிங்கமாக மிளிர நம்பியார் என்னும் மதம் கொண்ட யானை தேவை.

"இந்த நாள்" என்று ரஜினி தொடை தட்டிச் சவால்விட "கூட்டிக் கழிச்சி பாரு. கணக்கு சரியா வரும்" என்று அமர்த்தலான வில்லத்தனம் காட்டும் ராதா ரவி வேண்டும்.


உலகம் முழுவதிலும் வணிகப் படங்களில் தூக்கிப் பிடிக்கப்படும் நாயக நடிகர்களின் வளர்ச்சிக்கு ஆதாரமாக வில்லன்கள் இருந்திருக்கிறார்கள்.

# மிரட்டும் வில்லன்கள் எங்கே?










திரையில் வரும் கதாபாத்திரங்களை மட்டுமல்ல, மக்களையும் நடுங்கவைத்த வில்லன்கள் அனேகம் பேர் உண்டு. எம்.ஜி.ஆர். தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றபோது அவரிடம் ஒரு மூதாட்டி, "அந்த நம்பியாரு கிட்ட மட்டும் ஜாக்கிரதயா இருப்பா" என்று சொன்னதாக ஒரு பேச்சு உண்டு.

ஆனால் இத்தகைய வில்லன்கள் இன்று அருகிவருகிறார்கள். தமிழ் சினிமாவில் நாயக வழி-பாடு, எம்.ஜி.ஆர்., சிவாஜியில் தொடங்கி இன்று விஜய், அஜித் என்று வளர்ந்து நிற்கிறது. என்றாலும் வலுவான வில்லன்கள் குறைந்துகொண்டே வருகிறார்கள். மசாலா படங்கள் பெருகப் பெருக நாயகர்கள் சூப்பர் ஹீரோக்கள் ஆனார்கள். ஆனால் அவர்களை அப்படி ஆக்கிய வில்லன்கள் புறக்கணிக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள்.

நாயக பிம்பத்தைத் தூக்கிப் பிடிக்கும் படங்கள் இன்றும் அதிகமாக வந்தாலும் புதிய முயற்சிகளைக் கொண்ட படங்களும் ரசிகர்களுக்குப் பிடிக்கின்றன. வில்லன் தேவைப்படாத படங்கள் இன்று அதிகரித்துவிட்டன. வித்தியாசமான கதை கொண்ட படங்களும் சிரிக்கவைப்பதை மட்டுமே இலக்காகக் கொண்ட படங்களும் இவற்றில் அடக்கம்.

சண்டைக் காட்சிகள் தேவையில்லை, கொடூரமான வில்லன்கள் தேவையில்லை இரண்டரை மணிநேரத்தைச் சந்தோஷமாகக் கழித்தால் மட்டும் போதும் என்கிறார்கள் ரசிகர்கள். அதை நகைச்சுவை நடிகர்களைவிட மிக நன்றாகவே செய்கிறார்கள் இப்போதைய படங்களில் வரும் வில்லன்கள் என்பதுதான் நகைமுரண்.

நகைச்சுவைக்காகவே எடுக்கப்படும் படங்களில் மட்டும்தான் இப்படி என்றில்லை. சீரியஸாக மிரட்ட நினைக்கும் படங்களிலும் வில்லன்கள் தம்மை அறியாமலேயே சிரிப்பு மூட்டுகிறார்கள். "வேதநாயகம்னா பயம்" என்று வேட்டைக்காரனில் மிரட்டும் வில்லனைப் பார்த்துச் சிரிக்காதவர்கள் குறைவு.





தனுஷின் வேலையில்லா பட்டதாரி படத்தில் வரும் வில்லனைப் பார்த்து நாயகனே அமுல் பேபி என்று பரிகாசம் செய்யும் போதும் அதே விளைவுதான். அளவுக்கு அதிகமாகக் கொடூர முகம் கொள்ளும் வில்லன்களும் சிரிக்க வைக்கவே பயன்படுகிறார்கள். சிறுத்தை, வில்லு ஆகிய படங்களை உதாரணங்களாகச் சொல்லலாம்.

சூது கவ்வும் படத்தில் வரும் அதிபயங்கர என்கவுண்டர் போலீஸ் அதிகாரி தனது பின்புறத்தில் சுட்டுக்கொண்டு துடிக்கும்போதும், சுந்தர். சியின் கலகலப்பு படத்தில் வரும் வில்லன் நாய்க்கடி வாங்கும்போதும், நேரம் படத்தின் வில்லன் ஆட்டோவில் படாத இடத்தில் பட்டுச் சாகும்போதும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள் ரசிகர்கள். நாயக பிம்பங்களை உடைக்கும் படங்களை எடுக்கத் தயாராகாத தமிழ் சினிமா வில்லன்களின் பிம்பத்தை உடைப்பதில் உற்சாகமாக இறங்கியிருக்கிறது.

சில படங்களில் சூழ்நிலையே வில்லனாகிவிடுகிறது. ராஜா ராணி, மூடர் கூடம், இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா, முண்டாசுப்பட்டி,, குக்கூ, போன்ற படங்களை உதாரணமாகச் சொல்லலாம். இவற்றில் நாயகர்களுக்கு ஏற்படும் நெருக்கடிக்கு எந்தத் தனி நபரும் காரணமல்ல. திருமணம் என்னும் நிக்காஹ் என்னும் படத்திலும் இதே கதைதான். செயற்கையான வில்லன்களுக்குப் பதில் சூழலைக் கொண்டுவருவதன் மூலம் தமிழ் சினிமா யதார்த்தத்துக்கு நெருக்கமாக வருகிறது என்று சொல்லலாமா?

போட்டி, பயம், வெற்றி, தோல்வி, அவமானம் பரிகாசம் ஆகியவற்றுக்கு எல்லோரும் உள்ளாகிறோம். ஒரே ஒரு எதிரியை ஆயுள் முழுக்க யாரும் எதிர்கொள்வதில்லை. இதுவே வாழ்வின் யதார்த்தம். எனவே, ஒற்றை வில்லன் இல்லாத திரைப்படங்கள் ஒரு வகையில் நம் வாழ்க்கையின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்க முயல்கின்றன எனச் சொல்லலாமா?

அழுத்தமான வில்லன்கள் இனிச் சாத்தியம் இல்லையா? ஆடுகளம் திரைப்படத்தின் மிக அழுத்தமான ஆளுமை கம்பீரமாகத் தோன்றி எதிர்மறைத் தன்மை கொண்டதாக மாறும் பேட்டைக்காரன் கதாபாத்திரம்தான். மனதில் இருக்கும் வன்மத்தை மறைத்துக்கொண்டு சிரிக்கும் பேட்டைக்காரனைப் போன்ற மனிதர்கள் நம் வாழ்விலும் இருக்கலாம்.

எனவே அழுத்தமான வில்லன் கதாபாத்திரம் என்பது யதார்த்த வாழ்வுக்கு அப்பாற்பட்டதல்ல. இதே பாத்திரத்தைச் செயற்கையாகப் பூதாகரப்படுத்தி ரசிகர்களை மிரட்ட வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் புரிதலோடு வில்லன் பாத்திரத்தை அணுகினால் யதார்த்தமான அதே சமயம் அழுத்தமான வில்லன்களைத் திரையில் கொண்டுவர முடியும்.

அதே சமயம், யதார்த்தமான வாழ்க்கையோட்டத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு திரைக்கதைக்கு எளிய மனிதர்களே ஹீரோவுக்குரிய குணங்களோடும், வில்லனுக்குரிய வன்மத்தோடும் எழுந்து வரலாம். ஒரே மனிதரிடம் நற்குணங்களும் தீய குணங்களும் கலந்து இருக்க முடியும்.

இந்த யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் படங்கள் அதிகம் வந்ததில்லை. கொடூர வில்லன்களை ஒழித்துக்கட்டிவிட்ட தமிழ் சினிமா தட்டையான நாயகர்களுக்கும் விடைகொடுத்து அனுப்ப வேண்டும். நாயகத்துவமும் வில்லத்தனமும் கலந்த யதார்த்தமான மனிதர்களைச் சித்திரிக்கும் காலம் வருமா? அப்படியே வந்தாலும் அசட்டு நகைச்சுவைக்காக மட்டுமே இந்தக் கலவையைப் பயன்படுத்தாமல் இருக்குமா?

(நன்றி: இந்து)

ஏற்பாட்டுக்கு வழிவகுத்தது. விடுதலைப் புலிகள் தவிர ஏனைய இயக்கங்கள் அனைத்தும் மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொண்டு ஜனநாயக நீரோட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டன.

தொடர்ந்தும் தனிநாடு ஒன்றை அமைப்பதற்காப் போராடிய புலிகளை வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிக்க மறுத்தது. அதன் காரணமாக தமக்கு பாராளுமன்றத்திலும் ஒரு முகம் வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அவ்வாறு உருவான தமிழ் கூட்டமைப்பு "புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்" என்று பிரகடனம் செய்ததின் மூலம், புலிகளின் தனி நாட்டுக்கான போராட்டத்தைத் தாம் அங்கீகரிப்பதாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

2009 மே மாதத்துடன் புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள். அதன் பின்னரும் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற, மாகாண, உள்ளூராட்சித் தேர்தல்களில் ஈடுபட்டு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று வெற்றிபெற்று வருகிறார்கள். ஆனால் இந்தத் தேர்தல்களின் போது "தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறோம்" என மொட்டையாகச் சொல்கிறார்களே தவிர, அது என்ன வகையான தீர்வு எனச் சொல்லுவதில்லை.

தமிழர்களின் முதல் அரசியல் கட்சியான தமிழ் காங்கிரசிலிருந்து, பின்னர் உருவான ஆயுதப் போராட்ட இயக்கங்கள் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கை என்ன என்பதை கட்டாயமாக வெளிப்படுத்தியே ஆக வேண்டும்.

அதாவது ஐம்பதுக்கு ஐம்பதா, சமஸ்டியா, தனித்தமிழ் நாடா அல்லது வேறு ஏதாவது ஒன்றா என்பதை அவர்கள் தமிழ் மக்களுக்கும், நாட்டுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்துவது அவசியம்.

ஆனால் இவை எதையும் சொல்ல முடியாமல், அதேநேரத்தில் புதிதாக எதுவும் கைவசம் இல்லாமலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுமாறுவதைத்தான், பிரேமச்சந்திரனின் "தமிழ் மக்களிடம் அபிப்பிராயம் கேட்டு தீர்வுத் திட்டமொன்றை உருவாக்கப் போகிறோம்" என்ற கூற்று எடுத்தியம்புகின்றது என்பதில் சந்தேகம் இல்லை. அதாவது எந்தவொரு கொள்கையும் இல்லாமல் தமிழ் மக்களை ஏமாற்றித் தேர்தல்களில் கூட்டமைப்பினர் வென்று வருகிறார்கள் என்பதே உண்மை.

இதில் மோசடிக்காரர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஏனெனில் ஆண்டாண்டு காலமாக அது அவர்களது தொழில். தமது "தொழில் தர்மத்தை" விட்டு அவர்கள் ஒருபோதும் விலகமாட்டார்கள்.

ஆனால் அவர்களுக்கு வாக்களித்து அரியாசனத்தில் ஏற்றுகின்ற கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்து வருகின்ற தமிழ் பொதுமக்கள்தான் இந்த இடத்தில் குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்க வேண்டியவர்களாக மாறியிருக்கிறார்கள். எனவே அவர்கள்தான் தமது நிலையை ஒருமுறை திரும்பிப் பார்ப்பது அவசியம்.

(நன்றி: வானவில் 42)

**அ**மெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்பு அணுஉலை பாதுகாப்பு சறுக்கல்களை ஆராய்ந்து சொல்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார் டால்டன் ஃப்யூரி என்பவர். தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஒரு நாசகார எதிரியைப் போலவே அணுஉலைகளின் பாதுகாவலை உடைத்துச் சென்று பாதுகாப்பின் ஓட்டைகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதே சவால். தன் முயற்சியின் இலக்கை அடைவதற்குள் பிடிபட்டுவிட்டால் வாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டியதுதான்; கொல்லவும் படலாம் என்பதே இதிலுள்ள ஆபத்து.

இவ்வாறு சென்று பார்த்து, மின் உற்பத்தி நிலையங்களுக்கு எவ்வாறு எல்லாம் தீங்கு விளையலாம் என்பதை வைத்து நாவல் எழுதி இருக்கிறார். இதற்கு முன்னர் ஒசாமா பின் லேடனைத் துரத்திக் கொண்டு டோரா போரா மலைப் பகுதிகளுக்குச் சென்றவர் ஃப்யூரி. அடிதடி வீடியோ விளையாட்டுகளை வடிவமைப்பதற்கு ஆலோசகராகவும் பணியாற்றுகிறார். தனது சாகசப் பணியில், அமெரிக்காவில் இருக்கும் 61 அணு நிலையங்களில் நாற்பதில் அத்துமீறி தடைசெய்யப்பட்ட பிரதேசங்களுக்குள் நுழைந்திருக்கிறார். கதிரியக்க நாசகாரச் செயலை செய்துமுடிக்கக் கூடிய அளவுக்கு பதினாறு தடவை முன்னேறியிருக்கிறார். இவரது சாகசங்களை வைத்து, அணு உலைக் கூடங்களின் பாதுகாப்பை எப்படி மேம்படுத்துவது என்று யோசிப்பதுதான் அமெரிக்க அரசின் நோக்கம்.



பாதுகாப்பை உடைக்கும் சாகசம்!

# அற்புத உலகில் ஆலிஸ்

ஆங்கில மூலம் : லூயிஸ் கரோல்
தமிழில் : சுகுமாரன்

7

**வீ**ட்டின் அருகே ஒரு மரத்தடியில் போடப்பட்டிருந்த மேசையின் பக்கம் அமர்ந்து மார்ச்சு முயலும் பைத்தியக்கார ஹாட்டரும் தேனீர் அருந்திக் கொண்டிருந்தனர். டார்மௌஸ் எலி அவர்களுக்கு நடுவில் அமர்ந்து தூங்கி வழிந்தது. டார்மௌஸ் எப்போதும் தூங்கிக்கொண்டே இருப்பதில் பேர் பெற்றது.

மேசை பெரிதாக இருந்தது. இருக்கைகளும் நிறைய இருந்தன. ஆலிஸைப் பார்த்ததும் அவர்கள் "இங்கே இடமில்லை... இடமில்லை..." என்று கத்தினர்.

"நிறைய இடம் இருக்கிறதே" என்று கூறி மேசையின் மறுபுறத்தில் ஆலிஸ் அமர்ந்தாள்.

"கொஞ்சம் வைன் சாப்பிடுகிறாயா?" என்று மார்ச்சு கேட்டது.

"மேசையில் தேநீர் மட்டுந்தான் இருக்கிறது. வைன் இல்லை என்பது எனக்குத் தெரியும்" என்றாள் ஆலிஸ்.

"தேநீர் சாப்பிடு" என்று கோப்பையில் சூடாக ஊற்றினார் ஹாட்டர். அவர் தலையில் தொப்பிக்குள் தொப்பியாக மூன்று அணிந்திருந்தார். கோட் சூட் போட்டிருந்தார்.

"இன்றைக்கு என்ன கொண்டாட்டம்?" என்று கேட்டாள் ஆலிஸ்.

"இன்று எனக்கு பிறக்காத நாள். வருடத்தில் 365 நாள்களில் ஒருநாள்தான் என் பிறந்த நாள். மற்ற நாள்களையெல்லாம் பிறக்காத நாளாகக் கொண்டாடுகிறோம்" என்றார் ஹாட்டர்.

"இரண்டு பேரும் பைத்தியங்கள்" என்று பூனை சொன்னதை ஆலிஸ் நினைத்துக் கொண்டாள்.

"உங்கள் பிறக்காத நாள் கொண்டாட்டத்திற்கு அழைக்காமலே வந்திருக்கிறேன்" என்றாள் ஆலிஸ்.

ஒரு நிமிடம் விழித்துப் பார்த்த ஹாட்டர், "எழுதுவதற்குப் பயன்படும் மேசையைப் போன்றது ரேவன் பறவை. எதனால் சொல்லு?" என்று கேட்டார்.

"இது என்ன விடுகதையா?" என்று கேட்ட ஆலிஸ், "இதற்கான பதிலை என்னால் ஊகிக்க முடியும்" என்றாள்.

"அப்படியானால் உனக்கு விடை தெரியும். அதைச் சொல்லு" என்றது மார்ச்சு.

"சொல்லட்டுமா? நான் என்ன சொல்லுகிறேன் என்றால் அதுதான், அதுவேதான்" என்றாள் அவள்.

"என்ன? எதுதான்? எதுதான்?" என்று கேட்டுக்கொண்டே உறங்கியது டார்மௌஸ் எலி.

கொஞ்ச நேரம் அங்கு அமைதி நிலவியது. திடீரென்று பொக்கெற்றிலிருந்து ஒரு கடிகாரத்தை எடுத்துப் பார்த்துவிட்டு முகம் சுளித்தார் ஹாட்டர். பிறகு ஆலிஸிடம் "இன்றைக்கு என்ன திகதி?" என்று கேட்டார்.

கொஞ்ச நேரம் யோசித்த ஆலிஸ், "நாலாம் திகதி" என்றாள்.

"அப்படியானால் இரண்டு நாள் தாமதமாகிவிட்டது" என்று கூறி கண்ணைச் சிமிட்டினார் ஹாட்டர்.

ஆலிஸ் அந்தக் கடிகாரத்தைப் பார்த்தாள். "என்ன வேடிக்கை! இதில் திகதி மட்டும்தான்




இருக்கிறது. மணி பார்க்க முள் ஒன்றும் இல்லை" என்றாள்.

மார்ச்சு முயல் கடிகாரத்தைக் கையில் எடுத்துப் பார்த்தது. பிறகு தேநீர் கோப்பையில் போட்டு எடுத்துப் பார்த்தது. "எப்போதும் இந்தக் கடிகாரம் ஆறு மணியைத்தான் காட்டுகிறது" என்றது.

ஹாட்டர் அதை வாங்கிப் பிரித்து வெண்ணெய், ஜாம் எல்லாம் போட்டார். கடிகாரத்தை மேசையில் வைத்து சுத்தியலால் ஓங்கி அடித்தார். கடிகாரம் சுக்கு நூறாக உடைந்தது. மார்ச்சு முயல் "எல்லாம் போச்சு" என்று தலையில் அடித்துக் கொண்டது.

"டார்மௌஸ் எலி மறுபடியும் உறங்கிவிட்டது" என்று கூறி ஹாட்டர் சூடான தேநீரை அதன் மூக்கு மீது ஊற்றினார். அலறியடித்துக்கொண்டு விழித்த டார்மௌஸ் "யாரும் விடுகதைக்கு விடை சொல்லவில்லை" என்று கத்தியது.

"உனக்கு அந்த விடுகதையின் விடை கிடைத்துவிட்டதா?" ஹாட்டர் ஆலிஸிடம் கேட்டார்.

"நான் தோற்றுவிட்டேன். விடை எனக்குத் தெரியவில்லை. நீங்கள் சொல்லுங்கள்" என்று ஆலிஸ் பதில் சொன்னாள்.

"எனக்கும் விடை தெரியாது" என்றார் ஹாட்டர். அதையே மார்ச்சு முயலும் கூறியது.

"விடை இல்லாத விடுகதையைப் போடும் பொழுதுபோக்கைத் தவிர வேறு எதுவும் உங்களுக்குத் தெரியாதா?" என்று ஆலிஸ் கோபப்பட்டாள்.

"டார்மௌஸ் நன்றாகக் கதை சொல்லும்" என்றது மார்ச்சு முயல்.

"டார்மௌஸ் கதை சொல். எழுந்திரு" என்று ஹாட்டர் தட்டியெழுப்பினார்.

டார்மௌஸ், "நான் தூங்கவே இல்லை. என்னை ஏன் எழுப்புகிறீர்கள்" என்று தூக்கக் கலக்கத்தில் கேட்டது.

"ஒரு கதை சொல்" என்று மார்ச்சு முயல் கேட்டுக் கொண்டது.

"தயவுசெய்து கதை சொல்" என்று ஆலிஸும் சொன்னாள்.

"சீக்கிரம் சொல், மறுபடியும் தூங்கிவிடப் போகிறாய்" என்று எச்சரித்தார் ஹாட்டர்.

"முன்னொரு காலத்தில் மூன்று சகோதரிகள் இருந்தனர். அவர்கள் ஒரு கிணற்றுக்குள் வாழ்ந்தனர்" என்று டார்மௌஸ் கதையை ஆரம்பித்தது.

"அவர்கள் எதைச் சாப்பிட்டார்கள்" என்று உடனடியாகக் கேட்டாள் ஆலிஸ்.

"அவர்கள் தண்ணீருக்கடியில் வளரும் ஒருவகையான தாவரத்தைச் சாப்பிட்டனர்" என்றது டார்மௌஸ்.

அவர்கள் கஷ்டமான வாழ்க்கையை வாழ்ந்திருப்பார்கள் என்று கதையைக் கேட்டு கற்பனை செய்யத் தொடங்கினாள் ஆலிஸ். ஆனால், அதற்குப் பிறகு கதை தொடரவில்லை. டார்மௌஸ் அதற்குள் தூங்கிவிட்டது.

இதை ஆலிஸால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவள் வெறுப்புடன் எழுந்து நடந்தாள். அவர்கள் திரும்பி வரும்படி தன்னைக் கூப்பிடுவார்கள் என்று ஆலிஸ் நினைத்தாள். அப்படி எதுவும் நடக்கவில்லை.

"இனிமேல் இந்தப் பக்கமே வரமாட்டேன். எவ்வளவு பைத்தியக்காரத்தனமான விருந்து இது" என்று ஆலிஸ் தனக்குத்தானே பேசிக்கொண்டு நடந்தாள்.

சிறிது தூரம் நடந்த பிறகு கதவு உள்ள ஒரு மரம் தென்பட்டது. "என்ன அற்புதம்!"


என்று கூறிக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு ஆலிஸ் உள்ளே நுழைந்தாள்.

அழகான குரோட்டன்ஸ் செடிகளும், ரோஜா செடிகளும் பசுமையான புல்தரையும் அமைந்த ஒரு தோட்டத்திற்கு வந்து சேர்ந்தாள்.

(தொடரும்...)





X இற்குக் கிடைக்க வேண்டிய சரியான எண் யாது?




(1) 26 (2) 20 (3) 18 (4) 15

உருவில் காணப்படும் நாற்பக்கலின் மொத்த எண்ணிக்கையின் ஆயிடை யாது?

1) 5 - 10
2) 11 -15
3) 16 -20
4) 21 -25
5) 26 -30



## துணுக்குகள்

- மனிதனின் உடலில் விளையாட்டு பீரங்கி ஒன்றை வெடிக்கச் செய்யும் அளவுக்குப் பொட்டாசியம் உள்ளது.
- ஒரு மனிதன் தினமும் சராசரியாக 23,000 முறை சுவாசிக்கிறான்.
- நாம் இருமும்போது வெளியேறும் காற்று மணிக்கு 96கி.மீ. வேகம் இருக்கும்.
- மனித மூளையில் 80 முதல் 85 சதவீதம் தண்ணீர் உள்ளது.
- சட்டையைக் கண்டுபிடித்தவர்கள் எகிப்து நாட்டவர்.
- முகப்பவுடரைக் கண்டுபிடித்தவர்கள் இத்தாலியர்.
- பெயிண்ட் கண்டுபிடித்தவர்கள் இங்கிலாந்து நாட்டவர்.
- ஐஸ் கிறீமைக் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள்.
- 0 ஐக் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்கள்.

### சுவாமி விவேகானந்தரின் வீர மொழிகள்

நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி எல்லாம் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோமோ அப்படி நம்மை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது.



## விடுகதைகள்

1) பிடிக்கவே முடியாத கள்வன் அவன் யார்?
2) பூவில் பிறக்கும், நாவில் சுவைக்கும் அது என்ன?
3) மொட்டைப் பாறையில் மூடிய கண்கள் மூன்று அது என்ன?
4) கொடுக்க முடியும், எடுக்க முடியாது அது என்ன?
5) அண்ணன் தம்பி சேராவிட்டால் ஊருக்கெல்லாம் கொண்டாட்டம் அது என்ன?
6) சிவப்புப் பெட்டிக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது - அது என்ன?
7) மூன்று கண்கள் இருக்கும், இவனால் பார்க்க முடியாது அது என்ன?
8) நெருப்பு பட்டால் அழுவான் அவன் யார்?
9) அடியில் உள்ளவன் அடக்கமாயிருப்பான் மேலே உள்ளவன் நறுக்கென்று கடிப்பான் அவன் யார்
10) ராத்திரி பிறந்த பையன் தலைப்பாகையுடன் பிறந்தான் -அவன் யார் ?

*(விடைகள் அடுத்த வாரம்)*

## அறிந்துகொள்ளுங்கள்

- திருவள்ளுவர் திருக்குறளில் பயன்படுத்தா எழுத்து - ஔ
- அமெரிக்க ஜனாதிபதி பதவி ஏற்கும் நாள் - ஜனவரி 20
- 36 ஆண்டுகள் சிறையில் இருந்தார் நெல்சன் மண்டேலா
- எவரெஸ்ட் சிகரம் நேபாள நாட்டில் அமைந்துள்ளது.
- காந்தியடிகள் சிறையில் இருந்த நாட்கள் 2338.
- மீனின் செதில்கள் மூலம் அதன் வயதை அறியலாம்.
- அவுஸ்ரேலியாவுக்கு அடுத்த மிகப்பெரிய தீவு கிரீன்லாந்து
- உலகின் மிகப்பெரிய தீபகற்பம் - அரேபியா
- விண்வெளியில் பறந்த முதல் இந்தியர் ராகேஷ் சர்மா.
- தும்மல் மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகம் கொண்டது.
- காளான்களில் 70 ஆயிரம் வகைகள் உள்ளன.
- பாம்புகளுக்கு ஒரு நுரையீரல் மட்டுமே உள்ளது.
- ஒட்டகத்திற்கு மூன்று வயிறுகள் உண்டு.
- கறையான் அரிக்காத மரம் தேக்கு.

## கோபத்தை எப்படி அடக்குவது?



ஒருமுறை சுவாமி விவேகானந்தர் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.அவர் ஏறியிருந்த பெட்டியில் இரண்டு ஆங்கிலேயரும் ஏறியிருந்தனர். இரண்டு பேரும் விவேகானந்தரை வெறுப்போடு பார்த்தார்கள். இந்தியர்கள் என்றாலே அவர்களுக்கு இளக்காரம், ஏளனம்தான். அதுவும் துறவி என்றால் கேட்கவா வேண்டும். விவேகானந்தருக்கு ஆங்கிலம் தெரியாது என நினைத்து அவரைக்குறித்து அவர் காதுபடவே இழிவாகப் பேசினர்.விவேகானந்தர் ஒரு வார்த்தையும் பதில் பேசவில்லை. சண்டையிடவில்லை. மௌனமாக அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தார்.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றது. விவேகானந்தர் ஸ்டேஷன் மாஸ்டரை அருகில் அழைத்து குடிப்பதற்கு நல்ல நீர் கிடைக்குமா? என்று ஆங்கிலத்தில் அழகாகக் கேட்டார். அவர் ஆங்கிலம் பேசியதைக் கேட்ட, இரண்டு ஆங்கிலேயர்களும் திடுக்கிட்டனர். உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா? ஒருவர் வேகமாக விவேகானந்தரிடம் கேட்டார். நன்கு எழுதவும் பேசவும் தெரியும் ஆங்கிலத்திலேயே பதில் கூறினார் விவேகானந்தர்.

அப்படியானால் நாங்கள் கடந்த அரைமணி நேரமாக உங்களைத் திட்டிக் கொண்டிருந்தோமே., நீங்கள் ஏன் எங்களோடு சண்டையிடவில்லை? என்றனர். அதற்கு விவேகானந்தர் பொறுமையாக விடை கூறினார். நான் முட்டாள்களைச் சந்திப்பது இது முதல் முறையல்ல புத்திசாலித்தனமான பேச்சு சுவையாக இருக்கும்.

# இளம் சமுதாயத்தை வழி நடாத்த நாடகக்கலை ஊடகமாக அமையும்

## வலி.வடக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

இளம் சமுதாயத்தினரை சரியான முறையில் வழிப்படுத்துவதற்கான ஊடகமாக நாடகக்கலை அமைந்து விளங்குகின்றது. அவர்களை சரியான வழியில் வழி நடாத்துவதற்கும் சமூகப்பயன்பாடுடையவர்களாக உருவாக்குவதற்கும் பல்வேறு வகையான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வலி.வடக்கு பிரதேச செயலாளர் சிறிமோகன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பளை பிரதேச செயலக வழிகாட்டலில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஒழுங்குபடுத்தலில் நடாத்தப்படும் நாடகப்பயிற்சி பட்டறை. நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம பெற்றுவருகின்றது இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்

இப்பயிற்சிப்பட்டறையினை மாணவர்கள் ஒவ்வொருவரும் சரியான முறையில் பயன்படுத்தி தங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். சிறந்த வளவாளார்களைக் கொண்டு இப் பயிற்சிப் பட்டறையானது நடாத்தப்படுகின்றது. எமது பிரதேசசத்தினை மையமாகக் கொண்டு நாடகச் செயற்பாடுகளை முனைபபுடன் ஆற்றி வருகின்ற புத்தாக்க அரங்க இயக்கத்தின் வளவாளர்களாகிய எஸ்.ரி. குமரன் எஸ்.ரி. அருள்குமரன் ஆகிய இருவரையும் பலமுறை எமது பிரதேசத்தின் செயற்பாட்டிற்காக சந்தித்துள்ளேன். இவர்கள் எமது பிரதேசசெயலகத்துடன் இணைந்து பல்வேறு நாடகச் செயற்பாடுகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள் கடந்த வருடம் பண் பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் கலாசார வழிப்பணர்வை ஏற்படுத்தும் "பண்பாடு" என்னும் தெருவெளி ஆற்றுகையினை எமது பிரதேச செயலக பிரிவுகளில் ஆற றுகை செய்து கலாசார வழிப் புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளார்கள. இவ்வாறான செயற்பாடுகள் எமது பிரதேசம் சார்ந்து தேவைப்பாடுடையதாக விளங்குகின்றன.

எனவே இன்று நாடகக்கலையானது கல்வியோடு இணைந்த வகையில் பயன்பாடுடைய ஊடகமாக விளங்குகின்றது. இவ் ஊடகத்தினை மாணவர்கள் சரியான முறையில் சரியான வழிபப்படுத்தலில் பயின்று சமூகப் பயன்பாடுடைய விடயங்களில் ஈடுபாடு உடையவர்களாக உருவாக வேண்டும்.இதனூடாக சமூகத்தில் உள்ள பிறழ்வான விடயங்களில் இருந்து விடுபட்டு மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தினை உருவாக்கம் பெறச் செய்ய முடியும் என்றார். (63)

# மின்னொழுக்கினால் வர்த்தக நிலையம் எரிந்து நாசம்

## மல்லாவியில் சம்பவம்



(மல்லாவி)

மல்லாவி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக அக்கடை எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.00 மணி யளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கடையிலிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமடைந்துள்ளதாக விற்பனை நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.

பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து அங்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் பொதுமக்களுடன் இணைந்து பௌசர் மூலம் நீர் ஊற்றி தீயை அணைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. (140)

# துரிதகதியில் நடைபெறும் ஆலய திருப்பணிகள்

(யாழ்.நிருபர்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. பஞ்சதள இராஜகோபுரத்துடன் கூடிய மணிமண்டபம் மற்றும் மணிக்கூட்டுக் கோபுர வேலைகள் பூர்த்தியடைந்து தீந்தை பூசும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.


ஆலய மூலஸ்தான மற்றும் உள்மண்டப வேலைகள் நடைபெற்று வருகின்றன. கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் கும்பாபிஷேகம் நடாத்துவதற்கான ஏற் பாடுகள் நடைபெறுவதுடன் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கும்பாபிஷேக மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (10)

# நிதர்சனம் கவிதைநூல் அறிமுக விழா

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் கு.குகானந்தனின் (புத்தூர் கு.குகன்) நிதர்சனம் என்ற கவிதை நூலின் அறிமுகநிகழ்வு வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிகிழமை பகல் 1.30 மணிக்கு இடம் பெற்றது.

வித்தியாலய அதிபர் இரா. சிறீநடராஜா தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் வரவேற்புரையை சு. குணேஸ்வரன் நிகழ்த்தினார். நூலின் வெளியீட்டுரையை பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த கவிஞரும் பிரதேச செயலருமாகிய த. ஜெயசீலனும், கௌரவ விருந்தினர் உரையை வல்வை நகரபிதா ந.அனந்தராஜ்ஜும் நிகழ்த்தினார். நூலின் மதிப்பீட்டுரையை த.அஜந்தகுமாரும் நிகழ்த்தினார்.

நூலின் அறிமுகப் பிரதியை த.ஜெயசீலன் வெளியிட ந.அனந்தராஜ் பெற்றுக் கொண்டார். ஏற்புரையை நூலாசிரியரும் நன்றியுரையை ஆசிரியர் இ.உதய சங்கரும் நிகழ்த்தினர். (48)



கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம் பெற்ற போது விநாயகப் பெருமான் தேரில் வலம் வருவதைக் காணலாம். (18)

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழர்களின் இயலாமையையும் தாழ்வு மனப்பான்மையையும் யாராவது சுகமாக சொறிந்து கொடுத்து படம் எடுத்தால் அந்தப்படம் சூப்பர் ஹிட் ஆகும். அதற்கு இன்னுமொரு உதாரணம்தான் 'வேலையில்லா பட்டதாரி'. வேலை கிடைக்காமல், இங்கிலீஷ் பேசத் தெரியாமல், குடியில் தங்கள் வாழ்க்கையின் ஒரே சந்தோஷத்தை தேடிக்கொண்டு தான் ஒரு உதவாக்கரை என புழுங்கும் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு இந்தப் படம் ஒரு போலியான இளைப்பாறுதலை தருகிறது. இரண்டு இலட்சம் ரூபாய் சம்பாதிக்கிற சினிமா நடிகை மாதிரி பெண் உன்னைக் காதலிக்கலாம், நல்லவர்கள் யார் யாரோ தேடி வந்து உனக்கு உதவி செய்யலாம், அரசியல்வாதிகள், ரியல் எஸ்டேட் முதலைகளை எதிர்த்து நீ ஒரு இலட்சியவாதியாக தன்னந் தனியாக வெற்றி பெறலாம். நாலு பேரை ஒத்தை ஆளாக தூக்கிப் போட்டு அடிக்கலாம்...

இந்தப் பொய்களை எம்,ஜி.ஆர், ரஜினி, தனுஷ் என எத்தனை தலைமுறைகளாக தமிழர்கள் கூச்சமே இல்லாமல் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறார்கள்? இதெல்லாம் ஒரு கேளிக்கைதானே என்று ஒருவர் கேட்கலாம். இல்லை அதற்குள் நமது இயலாமைகள் ஒரு கேலிப் பொருளாக்கப் படுகிறது. நமது தாழ்வுணர்ச்சிகளின் மேல் பிரச்சினைகள் மேல் யாரோ சவாரி செய்கிறார்கள்.

சுந்தர ராமசாமி ஜே.ஜே சில குறிப்புகளில் எழுதியதுதான் நினைவுக்கு வருகிறது. "மாட்டுக்கு சொறிந்து கொடு.. மனிதனுக்கு சொறிந்து கொடுக்காதே." **– மனுஷ்யபுத்திரன்**

ஒரு கலைஞன், தற்காலத்திய உலக மயமாக்கலின் வருகைக்குப் பிறகு கலை இலக்கியங்களைப் படைக்கும் போக்கு என்பதை மிகமிக நுட்பமாக அவதானிக்க வேண்டியிருக்கிறது. படைப்பாளிக்கே தெரியாமல், தான் படைக்கும் படைப்பில் பல்வேறு அரசியல் கட்டமைப்புகள், வரலாற்றுத் திரிப்புகள், ஆதிக்க அழகியல்கள், நுட்பமாக தங்களது படைப்பின் சட்டகங்களுக்குள் நுழைந்து ஒளிந்து கொள்கின்றன.

இந்த நுட்பமான கூறுகள் என்பவை ஒரு படைப்பாளி உலகளாவிய படைப்புகளை மேற்கு நாடுகளின் படைப்புகளை அவதானித்து வருவதால்நிகழும் ரசனை மாற்றங்கள். இவை ஆழ்மன உளவியலில் கிடந்து மெதுவாக ஒரு கட்டத்தில் படைப்பாளியின் ரசனை மாற்றத்தை வாஸ்தவமாக மாற்றி படைப்பில் வந்து கம்பீரமாக உட்கார்ந்து கொள்ளும். இந்த நுட்பமான கூறுகளுக்குள் இயங்கும் நுண்ணரசியல்களை இனங்கண்டு அவைகளை நெறிப்படுத்த வேண்டும். இது தான் இன்றைய மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த படைப்பாளிகளின் சவால். **– கௌதம சித்தார்த்தன்**

ஜாங்கோ அன்செயின்ட் படத்தில் கறுப்பர் இனத்தின் அவலங்களை வலி மிகுந்ததாக துல்லியமாக வரலாற்று தகவலோடு பதிவு செய்திருப்பார் டோரண்டினோ. அது போல தமிழ் நாட்டில் டோரண்டினோ ரசிகர்கள் என்று சொல்லிகொள்பவர்கள் ஏன் நூற்றாண்டுகளாய் இங்கு இருக்கும் தலித் பிரச்சினை, ஜாதிய ஒடுக்குமுறை பற்றி எதுவும் படமெடுப்பதில்லை என்று ஒருத்தர் கேட்டார்.

சில நூறாண்டுகள் வரலாறு மட்டுமே இருக்கும் வெள்ளைக்காரனுக்கு இருக்கும் ரோஷத்தில், வரலாற்று அறிவில் ஒரு சதவீதம் நமக்கு இருந்தாலே நாம் உருப்பட்டிருப்போம் இல்லையா? **– விநாயக முருகன்**

பாரதிராஜா போன்ற கலைஞர்களை அரசு தத்தெடுக்க வேண்டும். அவர்களுக்கு மாதம் பத்து லட்ச ரூபாய் சம்பளத்தை அரசு தர வேண்டும். தமிழகத்தின் கலை, கலாச்சார பெருமையை சொல்லும்படியான படங்களை தயாரிக்கும் வேலையை அவர்களுக்கு அரசு தர வேண்டும் என்று சீமான் சொல்லியிருக்கிறார்

அதாவது நமது வரிப்பணத்தில் மாதம் பத்துலட்சம் சம்பளம் தர வேண்டுமாம். சரிதான். அப்படின்னா தாஜ்மஹால், அன்னக்கொடி போன்ற படங்களை குறிப்பாக சீமான் நடித்த படங்களை பார்த்த எங்களுக்கு மாதம் பத்தாயிரம் ரூபாய் தியாகி பென்ஷன் தருவீங்களா? **– விநாயக முருகன்**

# 46 பேர் சாட்சியமளிப்பு

மன்னார் பிரதேச செயல கத்தில் இடம்பெற்ற காணாமற் போனோர் தொடர்பான முறைப் பாடுகளை விசாரிக்கும் ஜனாதி பதி ஆணைக்குழுவின் முன் நேற்று முன்தினம் 46 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்திற்கான மூன்றாம் நாளுக்குரிய அமர் வுக்கு 60பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாக ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ குணதாஸ தெரிவித்தார்.

அழைப்பு விடுக்கப்பட்டவர் களில் 46 பேர் சாட்சிய மளிப்பதற்கு வருகைதந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 90 பேரிடம் புதிய முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.ஜனாதிபதி ஆணைக்குழுவினால் கடந்த இரண்டு நாட்களாக மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக் கப்பட்ட சாட்சி விசாரணைகளில் 83 பேரிடன் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

# லிபியாவிலுள்ள இலங்கையரை நாட்டுக்கு அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக லிபியா வில் உள்ள இலங்கையர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு, அவர்களின் உறவினர்களிடம் வெளிவிவ கார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான அனைத்து வசதிகளையும் செய்துதரத் தயாராகவுள்ளதாகவும் அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை அண்மையில் 17 பேர் கொண்ட குழு இவ்வாறு லிபியாவில் இருந்து நாடு திரும்பினர். லிபியா வில், இலங்கை ஊழியர்கள் சுமார் 200 பேர் வரையில் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது அந்த நாட்டில் மோதல்கள் நிலவுவதாகவும், எதிர்காலத்தில் அவை வலுப் பெறலாம் எனவும் கூறப்ப டுகின்றது.

இதன்படி லிபியாவில் உள்ள இலங்கையர்களுக்கு, இலங்கைத் தூதுவராலயம் மூல மாக இதனை அறிவித்து வரு வதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

எதுஎவ்வாறு இருப்பினும் லிபியாவில் உள்ள இலங்கை யர்கள் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது

# "எபோலா" வைரஸ் பரவுவதை தடுக்க சுகாதார அமைச்சு விசேட நடவடிக்கை


உயிர்கொல்லி நோயான எபோலா வைரஸ் இலங்கையில் நுழைவதை மற்றும் பரவுவதைத் தடுக்க விசேட மருத்துவ நிபு ணர்கள் மற்றும் சுகாதார பிரிவினர் விமான நிலையங்க ளில் சேவையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

உலகம் முழுதும் பரவிவரும் இந்த உயிர்கொல்லி வைரஸ் நாட்டினுள் நுழைவதை தடுப்பது மிக முக்கியமான விடயம். இதற்கமையவே விமான நிலை யங்களில் இப்பாதுகாப்பு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வைரஸ் தாக்கத்தினால் கடந்த திங்கள் வரையில் மேற்கொள்ளப்பட்ட கணக் கெடுப்பின்படி 887 பேர் உயிரிழந் துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், நீர் கொழும்பு ஆதார வைத்திய சாலையின் வசதிகளை அதிகரித்து நோய்த் தொற்றுடன் நாடு திரும்பும் நபர்களுக்கு உடனடி சிகிச்சை யளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கடந்த வாரம் இடம் பெற்ற அவசர கூட்டத்தில் சுகாதார அமைச்சர் மைத்ரிபால ஸ்ரீசேன தெரிவித்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

# ஜனாதிபதி சாரணர் மன்றத்தினால் வவுனியாவில் இரத்ததான முகாம்



(வவுனியா)

வவுனியா மாவட்ட இரத்த வங்கியில் இரத்த தட்டுப்பாட்டின் நிமிர்த்தம் அவர்களின் வேண்டு கோளிற்கிணங்க, வவுனியா மாவட்ட ஜனாதிபதி சாரணர் மன்றமும் திரி சாரணர் குழுவும் இணைந்து நடாத்திய தமது 7 ஆவது மாபெரும் இரத்ததான முகாம் கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணிவரை வவுனியா தாண்டிக் குளம் பிறமண்டு வித்தியால யத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி சாரணர் மன் றத்தின் தலைவரும், திரி சாரண, ஊடக மற்றும் பொதுத் தொடர் புகளுக்கான சாரண உதவி மாவட்ட ஆணையாளர் திரு சு.காண்டீபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

82 குருதி கொடையாளர்கள் இரத்ததானம் வழங்கி உன்னத மான சேவையினை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன், இவ் நிகழ் வின் ஒழுங்கமைப்பாளர்களை பாராட்டியுள்ளனர்.

இவ் நிகழ்வில் சாரண உதவி மாவட்ட ஆணையா ளர்களான பொன்னையா, கு.கமலகுமார், திருமதி நடேச மூர்த்தி, ஓய்வு பெற்ற தொழில் திணைக்கள உதவி ஆணையா ளரும் சமாதான நீதவானுமாகிய சோ.நகுலேஸ்வரம்பிள்ளை, தாண்டிக்குளம் பிறமண்டு வித்தி யாலய உப அதிபர் திருமதி விலாசினி, சாரண ஆசிரியர் திருமதி ஜெயந்தி கனேச மூர்த்தி, ஆசிரியர் திருமதி சிபாமா, சாரண தலைவர் சதீஸ், பாட சாலையின் சாரணர்கள், இளை ஞர்கள், பொதுமக்கள், இராணு வத்தினர் என பெருந்திரளா னோர் கலந்து நிகழ்வுகளை சிறப்பித்தனர்.

# மன்னார் மடுமாதா ஆலயத்திருவிழா பாதுகாப்பு கடமையில் 750 பொலிஸார்

மடு திருத்தலம் மற்றும் அதனை சூழ்ந்துள்ள பகுதிகளில் பக்தர்கள் முகாமிட்டிருக்கும் நிலையில், திருவிழா கால பாது காப்பு கடமைகளுக்காக பொலிஸ் அத்தியேட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியேட்சகர் தலைமை யில் சுமார் 750 பொலிஸார் கடமைகளுக்காக நியமிக்கப்பட் டுள்ளனர்.

மடு அன்னையின் வருடாந்த ஆவணித்திருவிழா கடந்த 06ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர் வரும் 15ஆம் திகதி திருவிழா நிறைவடைகின்றது. இதேவேளை, திருவிழா வுக்கான நவநாள் ஆராதனை கள் தினமும் மாலையில் இடம் பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியேட்சகர் சரத்குமார ஜோசப்பின் ஆலோசனைக்கு அமைவாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.டி.சந்திர பாலவின் வழிகாட்டலில் மேற்படி பொலிஸ் குழு கட மைகளில் ஈடுபட்டுவருகின்றது.

இந்நிலையில், மடுத்திருத் தலத்துக்கு வருகைதரும் பக்தர் களின் பாதுகாப்பு, மற்றும் குற்றச்செயல்களை கட்டுப் படுத்தும் முகமாக மடுத்திருத் தல நுழைவாயிலில் விசேட பொலிஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.



மேற்படி பொலிஸ் நிலையத் தின் பொறுப்பதிகாரியாக மடு பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி பி.எம்.எஸ்.எஸ்.குனசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

மடுத்திருத்தல சூழல் புனித பிரதேசம் என்பதால் அங்கு களியாட்ட நிகழ்வுகள் மற்றும் மதுபான பாவனை என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், குற்றச்செயல் களை கட்டுப்படுத்தும் பொருட்டு பொலிஸார் பகல் மற்றும் இரவு நேர சுற்றுக்காவல் கடமைகளில் ஈடுபடுவதோடு திருத்தல வளாகத்திலும் விசேட கடமை களில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்களுக்கு கணனித் தொகுதி அன்பளிப்பு

(கோப்பாய்)

வயாவிளான் ஸ்ரீவேலுப் பிள்ளை வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் பத்மநாதன் அன் னம்மாவின் ஞாபகார்த்தமாக புலம் பெயர்ந்த நாட்டில் வசிக் கும் அவரது பிள்ளைகள் ஒரு லட்சத்து 20ஆயிரம் ரூபா பெறுமதியான கணனித் தொகுதியை அப் பாடசாலை யில் கல்வி கற்கும் மாண வர்களின் பயன்பாட்டிற்கு வழங் கியுள்ளனர்.

இக்கணனிகளை அன்ப ளிப்பு செய்தவர்களின் உறவினர் கள் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்கள்.

வித்தியாலய அதிபர் யூட் மரியரத்தினம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் ஓய்வு நிலை அதிபர் கனகராசா யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் செல்வி. சுசிலா சாரங்கபாணி வலிகாமம் கல்வி வலய கணக்காளர் பி.குக னேஸ்வரி ஓய்வு நிலை அதிபர் க.ஆனந்தராசா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (08)

# யானை தாக்கி பெண் மரணம்

மட்டக்களப்பு – செங்கலடி மரப்பாலம் பகுதியில் யானை தாக்கி பெண்ணொருவர் உயிரி ழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணிய ளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 65 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளதாக கரடியனாறு வைத்தியசாலை யின் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

சடலம் தற்போது கரடி யனாறு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பெண் ணின் உயிரிழப்பை அடுத்து அவரது உறவினர்கள் வைத்திய சாலைக்கு சென்றுகொண்டிருந்த வேளை அவர்கள் சென்று கொண்டிருந்த லொறி விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இருவரும் கரடியனாறு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி மேலும் கூறினார்.





நயினாதீவில் அமைந்துள்ள நாகதீப விகாரையில் அமையவுள்ள மூன்று மாடி கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் விருந்தினர் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட விருந்தினர்கள் அடிக்கல் நாட்டுவதையும் காணலாம்

படம்-நந்தகுமார்

16) அதிகளவில் மகிழ்ச்சியாக உள்ளவர் யார்?
(i) சமன்   (ii) கமால்   (iii) நசீர்

17) அதிகளவில் துக்கமாக காணப்படுபவர் யார்?
(i) சுமன்   (ii) சமன்   (iii) ரமணன்

18) இயல்பாக உள்ளவர் யார்?
(i) சமன்   (ii) சுமன்   (iii) கமால்

19) எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான இயல்பு
(i) உணவு உண்ணல்   (ii) ஆடை அணிதல்   (iii) சிரித்தல்

20) ஆடு, மாடு → கால்நடை : மண்ணெண்ணெய், பெற்றோல் → ..................
(i) வாகனம்   (ii) லீற்றர்   (iii) எரிபொருள்

• கீழுள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

அலகும் காலும் செந்நிறமாய்
அமைந்து விளங்கும் காரணமென்
அருந்தக் கனிகள் தந்திடுவோம்
அன்பாய் நீயும் மொழிவாயே

21) இப்பாடல் எதனை நோக்கிப் பாடப்பட்டது?
(i) தாரா   (ii) கிளி   (iii) மரங்கொத்தி

22) மொழிவாயே என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(i) கூறுவாயே   (ii) செய்வாயே   (iii) தருவாயே

23) செந்நிறமாய் என்பதை பிரித்தெழுதினால்
(i) செ + நிறமாய்   (ii) செந் + நிறமாய்   (iii) செம்மை + நிறமாய்

• பின்வரும் எழுத்துக்களையும் எண்களையும் அவதானித்து விடை தருக

| 6 J S 7 2 K U 4 3 4 6 J 2 P 2 4 3 4 U K |
|---|

24) இக்கூட்டில் அதிகமாகக் காணப்படுவது
(i) எழுத்துக்கள்   (ii) எண்கள்   (iii) கூறமுடியாது

25) எண்களின் இரு பக்கமும் எழுத்துக்கள் அமைந்திருக்கும் சந்தர்ப்பங்கள்
(i) 1   (ii) 2   (iii) 3

26) ஒரே ஒரு தடைவ மட்டும் வந்துள்ள ஆங்கில எழுத்து
(i) U   (ii) S   (iii) T

• கீழே தரப்பட்ட வினாக்களில் முதலில் உள்ள எண் பெறுமானத்திற்குப் பதிலாக ஈடுபடுத்தக் கூடிய எண் கூட்டத்தை தெரிவு செய்து கோடிடுக.

27) IX + V = (1) X - VI   (2) X + IV   (3) VIII + V

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 இங்குள்ள போக்குவரத்துச் சாதனங்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



(அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ)

இக்கூட்டங்களை சரியாகக் காட்டும் விடைத்தொகுதி

(1) அ, ஆ / இ, ஈ / உ, ஊ
(2) ஈ, ஊ / அ, உ / ஆ, இ
(3) அ, ஈ / உ, அ / இ, ஊ

2) இங்குள்ள காய்கறி வகைகளை மூன்று கூட்டங்களாக வகைப்படுத்தலாம்.



(அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ)


(1) அ, ஆ / இ, ஈ / உ, ஊ
(2) அ, உ / ஆ, ஈ / இ, ஊ
(3) அ, ஈ / இ, ஊ / ஆ, உ

3) கீழே தரப்பட்ட உருக்களில் கருத்துடனும் பொருத்தமானதுவுமான உருவை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
கூரிய கண்பார்வையுடையது.



(1) (2) (3)

4) சுறுசுறுப்பானது, உணவைச் சேமித்துவைக்கும்: சமுதாயமாக வா...



(1) (2) (3)

- 5ஆம், 6ஆம் வினாக்களில் சரியான விடையைத் தெரிவுசெய்யுங்கள்

5. படத்தில் உள்ளவர்.



1. கொங்காலேகொட பண்டா.
2. கப்பெட்டிபொல திசாவை.
3. கலாநிதி ஆநந்தக்குமாரசாமி.

6. இப்படத்தில் உள்ள இலட்சினை குறிப்பது.



1. இலங்கை மின்சாரசபை.
2. தேசிய கல்வி நிறுவகம்.
3. யூனிசெவ் நிறுவனம்.

- 7ஆம், 8ஆம் வினாக்களுக்கான சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

7) கிணற்றில் உள்ள நீரை அள்ள கப்பியும் துணியை வெட்ட கத்திரிக்கோலும் பயன்படுத்தக் காரணம்.
   (i) அவை இரும்பினால் ஆக்கப்பட்டுள்ளமை
   (ii) வேலையை இலகுவாக்கலாம் என்பதால்
   (iii) வேறு வழி இல்லாமையினால் ஆகும்.

8) கங்காரு என்னும் விலங்கினத்தின் பின்னங்கால்கள் நீண்டிருப்பதற்கான காரணம்.
   (i) வேகமாக ஓடுவதற்கு
   (ii) நடந்து செல்ல வசதியாக
   (iii) உணவு உண்பதற்கு ஏற்றதாக

- கீழ் காணும் தகவல்களை ஒழுங்கமைத்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

9) 1. தேயிலை சாயம் கலக்க வேண்டும்
   2. தரமான பால், தேநீர் தயார்
   3. தண்ணீரைக் கொதிக்க வைக்க வேண்டும்
   4. சீனி, பால்மா சேர்த்து கரைக்க வேண்டும்.

   (1) 3, 2, 1, 4　　(2) 3, 1, 4, 2　　(3) 2, 1, 3, 4



10) 1. பயணச் சீட்டுப் பெறுதல்　　2. பொதிகளை இருக்கையின் மேல் வைத்தல்
    3. புகையிரத நிலையம் செல்லுதல்　　4. ஆசனத்தில் அமருதல்

    (1) 4, 2, 3, 1　　(2) 3, 2, 1, 4　　(3) 3, 1, 2, 4

11) கீழே உள்ள கோட்டுப் படத்தில் அடுத்து வரும் உரு?

| | | | |
|---|---|---|---|
| D | C | C | B |
| A | B | D | A |

→

(1)


| | |
|---|---|
| A | D |
| C | B |

(2)

| | |
|---|---|
| A | D |
| B | C |

(3)

| | |
|---|---|
| B | A |
| C | D |


12) 


- அடிக்கோடிடப்பட்டுள்ள தடித்த சொற்களுக்கு பொருத்தமான பதத்தைக் கொண்ட சோடியைத் தெரிவு செய்து அதன் கீழ் கேடிடுக.

13) வைத்திய **நிபுணர்** நோயாளிக்கு **ஆலோசனை** கூறினார்
    (1) சித்தி, சிறப்பு　　(2) பிரசித்தி, புத்திமதி　　(3) அறிஞர், அறிவுரை

14) திலீபனின் **திறமை** பரீட்சைப் **பெறுபேற்றில்** தெரிந்தது.
    (1) சித்தி, சிறப்பு　　(2) ஆற்றல், முடிவு　　(3) வல்லமை, குறிப்பேடு

15) கீழுள்ள உருவில் → காட்டும் பெட்டிக்குப் பொருத்தமான எண்.





1) 6. 4, 0, 9
2) 4, 6, 0, 9
3) 6, 4, 9, 0

- குறிப்பிட்ட ஒரு நாளின் 3 வேளைகளில் 5 பிள்ளைகளின் முக பாவனை கீழே உள்ள கோட்டுப் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

| | நசீர் | சுமன் | கமால் | ரமணன் | சமன் |
|---|---|---|---|---|---|
| காலை | ☺ | ☹ | ☺ | 😐 | 😐 |
| மதியம் | ☺ | ☹ | ☹ | ☺ | 😐 |
| மாலை | ☺ | 😐 | 😐 | ☺ | 😐 |

☺ மகிழ்ச்சி
😐 சாதாரணம்
☹ துக்கம்



யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் நல்லைக் குமரன் 22 ஆவது மலர் வெளியீட்டு விழா நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவினால் "யாழ்.விருது 2014" வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் நல்லைக் குமரன் மலரின் முதற்பிரதியை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான அறங்காவலர் பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரத்திடம் பெற்றுக் கொள்வதையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

படங்கள்- ஆர்.இராஜகுமார்.

## பரீட்சை தொடர்பாக பெற்றோருக்கு அறிவுறுத்தல்

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான அறிவித்தல் ஒன்றை பரீட்சை ஆணையாளர் வெளியிட்டுள்ளார்.

பரீட்சை நடைபெறும் போது பரீட்சை மண்டப வளாகத்தில் பெற்றோர் எவரும் நடமாட்டக் கூடாதெனவும் குறிப்பாக முதலாவது வினாப் பத்திரத்திற்கான விடைத்தாள் சேகரிக்கப்பட்டு இரண்டாவது வினாப் பத்திரம் வழங்கப்படும் வரையும் குறுகிய இடைவெளியின் போது பெற்றோர் பிள்ளைகளைச் சந்திக்கவோ சிற்றுண்டி குளிர்பானம் வழங்குவதற்காக பரீட்சை மண்டபத்தில் நுழைவதற்கோ அனுமதிக்கக் கூடாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## ஹாட்லி மாணவர்களின் சாதனை சர்வதேச அளவில் வியாபித்துள்ளது

### ஹாட்லிக் கல்லூரி பழையமாணவர் வின்சென்ற் தெரிவிப்பு

(வடமராட்சி)

1838 ஆம் ஆண்டு மிஷனரிமாரினால் ஆரம்பிக்கப்பட்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 175 வருடங்களாகக் கல்விச் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது. இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் உலகெங்கும் பரந்திருந்து வியத்தகு சாதனைகளை நிகழ்த்தி கல்லூரிக்கும் எமது பிரதேசத்திற்கும் பெருமையும் புகழும் தேடித் தந்துக் கொண்டிருக்கின்றனர் என தொழிலதிபரும் கல்லூரியின் பழைய மாணவருமான வின் சென்ற் டீ போல் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கல்லூரி தின விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் என்.குணசீலன் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஹாட்லிக் கல்லூரி புகழ் பூத்த கல்லூரியாக சாதனைகளை நிகழ்த்துவதற்கு காலத்திற்கு காலம் அதிபர் ஆசிரியர்களாக கல்விச் சேவை ஆற்றுபவர்களின் தியாக மனப்பான்மையும் தன்னலமற்ற சேவைகளுமே காரணமாகும். பெற்றோர்களும் பழைய மாணவர்களும் கல்லூரிக்கு வழங்கி வரும் பூரண ஒத்துழைப்புக்களும் பாராட்டப்படவேண்டியன இக் கல்லூரியில் அதிபர் பூரணம் பிள்ளை காலம் ஒரு பொற்காலம் என்றே கூற வேண்டும். அவரைத் தொடர்ந்து பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட அதிபர் ஆசிரியர்களும் மிகச் சிறந்த சேவைகளை வழங்கியுள்ளனர்.

முன்னைய காலங்களின் மாணவர்களின் தேவைகளைப் போலல்லாது இன்றைய மாணவர்களின் தேவைகள் வித்தியாசமானவை. காலமாற்றங்களுக்கேற்ப அவற்றில் வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன இம் மாற்றங்களுக்கேற்ப இன்றைய மாணவர்களின் தேவைகள் பெற்றோர்களினால் கட்டுப்பாடான முறையில் பூர்த்தி செய்யப்படும் போது மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் உயர்வடையும் அவர்கள் சாதனைகளைப் புரிய வாய்ப்பேற்படும் என்றார். (01)

## அறிவுறுத்தல் கூட்டம்

(நெல்லியடி)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இப்பரீட்சையில் கடமையாற்றும் மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள், நோக்குநர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நேற்று முன்தினம் மருதனார் மடத்திலுள்ள வட இலங்கை சங்கீத சபை கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பரீட்சையின் முக்கியத்துவம் மாணவர்களுக்கு இடையூறாகாமல் பணிகளை மேற்கொள்ளுதல், பரீட்சை குறித்து கவனம் செலுத்துதல் போன்ற பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. (17)

## ஆசிரியர் கலாசாலை அதிபர் கணபதிப்பிள்ளைக்கு மணிவிழா

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் மணிவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் மணிவிழாக்குழுத்தலைவர் வீ.கருணலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இருபாலை சந்தியிலிருந்து விழாநாயகன் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்படவுள்ளார். மங்கல விளக்கேற்றலைத்தொடர்ந்து சங்கீத பூஷணம் செ. குமாரசுவாமி இறைவணக்கம் பாடுவார் வரவேற்பு நடனத்தையடுத்து கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் புனித வினனர் குருத்துவக்கல்லூரி அதிபர் அருட் பணி செ. அன்புராசா, மௌலி எம். ஏ. பைசர் ஆகியோர் வழங்குவர். தலைமையுரையை வீ கருணலிங்கம் நிகழ்த்துவார்

கணாதீபம் மணிவிழா மலர் வெளியிடப்பட்டு அறிமுகவுரையை பதிப்பாசிரியர் ச.லலீசன் வழங்குவார்.

வாழ்த்துரைகளை தமிழ்ப் பாடசாலைகளுக்கான கல்விப் பணிப்பாளர் எஸ். முரளிதரன், ஆசிரிய கல்வி நிர்வாகக் கல்விப் பணிப்பாளர் திருமதி என். எப் எம். ஹரிஜா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கல்வியமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ. இராஜேந்திரா, யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் தி.வேல்நம்பி, கலாநிதி த.கலாமணி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், தீவகப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ. குணநாதன் டாக்டர் லயன் வை. தியாகராஜா, முன்னாள் விரிவுரையாளர் இ. மருதலிங்கம் சிரேஷ்ட விரிவுரையாளர் வீ எஸ். குணசீலன் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி வதனி கேதாரநாதன், ஆசிரியர் சி. சிவரூபன், மாணவர் மன்றத் தலைவர் ம.சயந்தரூபன் ஆகியோர் வழங்கவுள்ளனர். விழா நாயகனைக் கௌரவித்தலும் அவரது ஏற்புரையும் இடம் பெறும் மணிவிழாக் குழுசெயலாளர் த. கோபால கிருஷ்ணர் நன்றியுரை நவில்வார். பிரண்ட்ஸ் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (137)



கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவை, சர்வமத சமாதானப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் சமூக மேம்பாட்டிற்கு வணக்கஸ்தலங்களின் பங்களிப்புக்களும் செயற்பாடும் எனும் தொனிப்பொருளிலான மதகுருமார்களிற்கான கருத்தரங்கொன்று கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற போது. (90)

## இளைஞர் கழகத்தினால் இரத்ததான முகாம்

சர்வதேச இள்ளஞர் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட செயலகமும் யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட காரியாலயமும் இணைந்து சிரமதானம் மற்றும் இரத்ததான முகாம் என்பனவற்றை ஏற்பாடு செய்துள்ளன.

இவ் நிகழ்வு இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் செ.விஜிதரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ் போதனா வைத்தியசாலை பணிப பாளர் பவானி பசுபதிராஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு மாகாண பதில் பணிப்பாளர் கே.தவராஜா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இரத்ததான நிகழ்வு காலை 8.30 மணி முதல் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில இடம்பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து சிரமதான நிகழ்வு யாழ் போதனா வைத்தியசாலையில் இடம்பெறாவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் இரத்ததானம் மற்றும் சிரமதான நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (48)

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# உலக நாடுகளை அச்சுறுத்திவரும் எபோலாவுக்கு மருந்து இல்லை

## உலக சுகாதார நிறுவனம் தகவல்



உலக நாடுகளை அச்சுறுத்திவரும் எபோலாவைக் குணப்படுத்தும் மருந்து இல்லை என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகள் மட்டுமன்றி உலக நாடுகளையே கதிகலங்க வைத்துள்ளது எபோலா வைரஸ். நாளுக்கு நாள் இந்நோயின் தாக்கம் அதிகரித்து வருவதுடன் இதனால் பலியானவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் எபோலாவை குணப்படுத்தும் மருந்து கண்டறியப்படவில்லை என்றும், 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் கண்டுபிடித்து விநியோகிக்கப்படும் எனவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்நிறுவனத்தின் உதவி இயக்குநர் ஜெனரல் மேரி பால்கினி கூறிய தாவது,


உயிர்க்கொல்லி நோயான எபோலாவை கட்டுப்படுத்திக் குணப்படுத்தக் கூடிய மருந்தை தயாரிக்க இங்கிலாந்தைச் சேர்ந்த கிளாகோஸ்மித் கிலைன என்ற மருந்து கம்பெனி முன்வந்துள்ளது. இதற்கான பரிசோதனை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது. தற்போது 'மாப்பயோ பார்ம சூடிகல்' என்ற நிறுவனமும் மருந்து தயாரித்துள்ளது.

அது 'எபோலா' வைரஸ் நோயால் ஆபிரிக்காவில் பாதிகக்கப்பட்ட 2 அமெரிக்கர்கள் மற்றும் குரங்குகளின் உடலில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். இம்மருந்தை நோயாளிகளுக்கு செலுத்துவது குறித்து முடிவு செய்யப்படும் எனவும் ஜெனரல் மேரி பால்கினி தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# பா.ஜ.க.வின் வெற்றிக்கு மக்கள் மட்டுமே காரணம்

## ஆர்.எஸ்.எஸ். தலைவர் தகவல்



நாட்டு மக்கள் காங்கிரஸ் ஆட்சியை மாற்ற வேண்டும் என்ற முடிவை எடுத்ததே தற்போது ஆட்சி மாறியதற்கு காரணமாகவுள்ளது என ஆர்.எஸ்.எஸ். தலைவ்ர் மோகன பக்வத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஒரிசா மாநிலம் புவனேஸ்வரத்தில் நடந்த ரக்ஷாபந்தன் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தை சொல்கிறார்கள். சிலர் கட்சியால் தான் பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததாகவும் சிலர் மோடியால் மட்டும்தான பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்ததாகவும் கூறுகிறார்கள். உண்மையில் நாட்டு மக்கள் காங்கிரஸ் ஆட்சியை மாற்ற வேண்டும் என்று முடிவு எடுத்ததே தற்போது ஆட்சி மாறியதற்கு காரணமாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாறியதற்கு ஒரு போதும் மோடி காரணம் அல்ல. தனிப்பட்ட ஒருவரால் நிச்சயமாக ஒரு கட்சியின் வெற்றியைத் தீர்மானிக்க முடியாது. மக்கள் மாற்றத்தை நினைத்தால் மட்டுமே மாற்றம் நிகழும்.

எனவே நாட்டில் எல்லா சமுதாய மக்களும் ஒரே மாதிரியான வளர்ச்சியைப் பெற வேண்டும். ஒரு தரப்பினர் பாதிக்கப்பட்டால் புரட்சி உண்டாகும் என்றார்.

# 500 பேரைக் கொன்று குவித்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்


ஈராக்கின் சில நகரங்களைக் கைப்பற்றி தங்கள் வசமாக்கிக் கொண்ட இஸ்லாமிய ஜிஹாதி எனப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அப்பகுதியில் பேராதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

பல இடங்களில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை இடித்து தரைமட்டமாக்கிய ஜிஹாதிகள், அப்பகுதியில் வசித்த கிறிஸ்தவர்களையும் ஊரை விட்டு விரட்டியடித்ததுடன், அங்கு வாழும் முஸ்லிம் பெண்களின் மீதும் மதக் கட்டளை என்ற பெயரில் பெண்ணுறுப்பை சிதைத்தல் உட்பட ஏகப்பட்ட கட்டுப்பாடுகளை விதித்து அட்டூழியம் செய்து வருகின்றனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் பிடியில் உள்ள நகரங்களில் வசிக்கும் அனைவரும் இஸ்லாம் மதத்தை தழுவ வேணடும் என்றும் கட்டளையிடப்பட்டுள்ளதால் இவர்களின் ஆவேசத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய குர்திஷ் மற்றும் யாஸிதி இனத்தை சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 20 ஆயிரம் மக்கள் ஜிஹாதிகளால் ஊரை விட்டு விரட்டப்பட்டனர். இவர்கள் மலை உச்சிகளில் தஞ்சமடைந்து, குடிக்க நீரின்றியும், உண்ண உணவின்றியும் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் கட்டளைக்கு அடிபணிய மறுப்புத் தெரிவித்த சுமார் 500 பேரை இவர்கள் கொன்றும், சிலரை உயிருடனும் புதைத்துமுள்ளனர் என ஈராக்கின் மனித உரிமை துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 72 மணிநேர போர் நிறுத்தம் காஸாவில் மீண்டும் ஆரம்பம்



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கு இடையில், பல நாட்களாக நீடித்து வரும் போர், மீண்டும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

காஸா பகுதியில் இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற உக்கிர மோதல்களை அடுத்து பல நாடுகள் கண்டனம் வெளியிட்டு வருகின்றன.

இந்த மோதல்களை உடன் நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை, அமெரிக்கா உள்ளிட்ட பல தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் எகிப்தின் மத்தியஸ ்த்தில் காஸாவில் மீண்டும் 72 மணி நேர யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# ஈரானில் விமான விபத்து புயணித்த 38 பேர் பலி



ஈரானில், பயணிகள் விமானம் ஒன்று, குடியிருப்பு பகுதியில் விழுந்து நொருங்கியதில், பயணம் செய்த 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆசியக் கண்டத்தின் மேற்கு பகுதியில் உள்ள இஸ்லாமிய நாடான ஈரானில், 48 பயணிகளுடன், தபாஸ் என்ற நகருக்கு நேற்று முன்தினம் காலை புறப்பட்ட குட்டி விமானம் ஒன்று தலைநகர் டெஹ்ரான் விமான நிலையத்திலிருந்து கிளம்பிய அடுத்த சில நிமிடங்களில், மெஹ்ராபாத் என்ற மக்கள் குடியிருப்பு பகுதியில் விழுந்து நொருங்கியது.

இந்த விமான விபத்துக்கான காரணம், விமானத்தில் ஏற்பட்ட திடீர் இயந்திர கோளாறே என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் விமானததிலிருந்த பயணிகள், விமானிகள் என, 38 பேர் இறந்துள்ளனர்.

பழைய விமானம் மற்றும் மோசமான பராமரிப்பு போன்றவற்றால், ஈரான் நாட்டின் விமானங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருகின்றன. அந்நாட்டு விமான நிறுவனத்தால் இயக்கப்படும் விமானங்களில் பெரும்பாலானவை, 40 ஆண்டுகளுக்கும் பழமையானவை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாட்டில், 1979இல் இருந்து தீவிர இஸ்லாமிய பழமைவாத கொள்கை பின்பற்றப்படுவதால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான உறவை, ஈரான் துண்டித்துக் கொண்டது. இதனால், பிற நாடுகளின் விமான தயாரிப்புகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

## புலி....

இடம்பெயர்ந்தவர்களின் போராட்டத்தில், இடம்பெயர்ந்தவர்கள் தற்போது இருக்குமிடத்தின் பக்கத்து வீட்டுக்காரர்கள் அல்லது இடம் பெயர்க்கப்பட்ட கிராமத்தின் பக்கத்து கிராமத்தவர் கலந்து கொண்டிருக்கிறார்களா? முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி நிகழ்வுகளில், கொல்லப்பட்டவர்களின் பக்கத்துவீட்டுக்காரர் எங்காவது கலந்து கொண்டிருக்கிறாரா? ஒரு பக்கத்து வீட்டுக்காரனைக்கூட திரட்டமுடியாத நிலையில் உள்ள இந்தப் போராட்டங்களை மக்கள் போராட்டம் என கொள்ள முடியுமா என்பதே எனது கேள்வி.

பக்கத்து வீட்டுக்காரனை விடலாம். சொந்த மாமன் மச்சானாவது கலந்து கொண்டிருப்பார்களா? குறிப்பாக காணாமல் போனவர்களின் போராட்டங்களைக் கவனியுங்கள். அதிகமாக பெண்கள்தான் கலந்து கொள்கிறார்கள். சரணடைந்தவர்கள், கடத்தப்பட்டவர்கள் அனேகமானவர்கள் ஆண்கள்தான் என்பதால், அவர்களின் மனைவிமார்தான் கலந்து கொள்கிறார்கள். சரணடைந்தவர்களிற்கு சகோதரர்கள், மாமன், மச்சான் இல்லையா? கணவன் என்றால் மனைவி, பிள்ளையென்றால் பெற்றோர் என்ற நேரடியான உரித்து சொந்தம் தவிர்ந்த வேறு யாரும் போராட்டங்களில் கலந்து கொள்வதில்லை.

இதற்கு உடனடியாக எல்லோரும் ஒரு காரணம் சொல்லக்கூடும். அரசபடைகளின் அச்சுறுத்தல் இருக்கிறது எனக்கூறி தப்பித்து கொள்ள முனையலாம். இது மிக வெளிப்படையான உண்மைதான். ஆனால், இன்று போராட்டத்தில் கலந்து கொள்ளும் அனைவருமா கடத்தப்பட்டுள்ளனர்? அச்சுறுத்தப்பட்டுள்ளனர்?

மீண்டும் மீண்டும் ஒரே ஆட்கள்தானே போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு காணாமல் போகச் செய்யும் அரசிற்கு தொண்டைத் தண்ணியை வத்திப் போகச் செய்யவேண்டாமா? இதன் அர்த்தம் என்னவென்றால், சக மனிதனின் துயரத்தில் அவனது பக்கத்துவீட்டுக்காரனே பங்கெடுக்கவில்லை என்பது தானே?

மக்களைத் திரட்டமுடியாத அமைப்புக்கள் பாரிய போராட்டங்களைச் செய்வதாக ஊடகங்களில் கப்சாவிட்டுக் கொண்டிருப்பது அவர்களது விளம்பரத்துக்கு மட்டுமே உதவும். தோசை சுட்டுக் கொடுக்க மட்டுமே விரும்புகிற திருவாளர் பொதுசனமும் இந்தப் போராட்டங்கள்தான் உலகத்தை திரும்பிப்பார்க்க வைக்கப்போகிற போராட்டங்கள் என்று நம்புவதாக நடிப்பார். கேட்டால் அதுதான் அவர்கள் போராடுகிறார்களே என்று கையைக் காட்டித் தப்பித்துக்கொள்வார்.

இப்படியே போனால் எப்போதும் போல இப்போதும் தமிழினம் போராட்ட உரைகளில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் நின்று கொண்டே இருக்க வேண்டியதுதான். அதற்கடுத்த கட்டம் என்று ஒன்று வரவே போவதில்லை. இந்த உண்மை தமிழர் தரப்பில் மைக்பிடிக்கிற அனைவருக்கும் ஏற்கனவே தெரிந்த ஒன்றுதான். ஆனாலும் அவர்கள் விரும்புவதும் அதுதானே... இப்படியே இருக்கவேண்டும் பேசிப் பேசியே நாம் பிழைக்க வேண்டும்.

என்றைக்கு தன் பக்கத்து வீட்டுக்காரனின் துயரத்திற்காகத் தமிழன் வீதிக்கிறங்குவானோ அன்றைக்கே தொடங்கும் மெய்யான மக்கள் போர்ராட்டம்.அதுவரைக்கும் நடப்பதெல்லாம் அய்யா நீங்க அடியுங்கோ நாங்க போராடுறம் என்பது தான்.

# யமுனா ஏரியை விற்பனை செய்தவர்கள் யார்? சட்ட நடவடிக்கை மூலம் அதை மீட்கவேண்டும்

## யாழ். மாநகர முதல்வர் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க ஏரிகள், நிலங்கள் பல தனியாருக்கு கடந்தகால ஆட்சியாளர்கள் விற்ற துக்ககரமான நிகழ்வுகள் கூட இடம்பெற்றுள்ளது. இதனால்தான் யமுனா ஏரியை எம்மால் புனரமைக்கமுடியாத நிலையில் இருக்கின்றது என யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸவரி பற்குணராஜா தெரிவித்தார்.

நேற்று நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்ற நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கலாநிதி ஆறு. திருமுருகன் விடுத்த வேண்டுகோளுக்கமைய ஜமுனா ஏரியை புனரமைக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். ஆனால் கடந்தகால ஆட்சியாளர்கள்தான் அதனை விற்றுள்ளனர். இதனால எதுவும் செய்ய முடியவில்லை.

அந்தக்கால அரசகுமாரிகள் நீராடிய வரலாற்று சின்னமான் அந்த ஏரி தூர்ந்து போயுள்ளது. இது தமிழன் ஒவ்வொருவனும் வருத்தப்படவேண்டிய விடயம்.

இந்த ஏரியை புனரமைக்க கைலாசப் பிள்ளையார் ஆலய குரு நிதி தருவதாக தெரிவித்த போதும் அது இப்போது தனியாரது ஏரி, அதை புனரமைக்க முடியாது. அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதாரங்கள் எம்மிடம் இருக்கிறது. எந்தத் தமிழனானாலும் இதைச் செய்ய வேண்டும். வேறுபாடுகள் இருக்கக்கூடாது.

இந்த ஏரிக்கு அருகிலுள்ள காணி கூட குத்தகைக்கு கொடுத்து அதில் கட்டடம் கட்ட கோரப்பட்டுள்ளது. ஆனாலும்



அதற்கு எதிராக நாம் வழக்குத் தொடர்ந்துள்ளோம்.

இந்த உண்மை அனைவருக்கும் தெரிய வேண்டும். இந்த நிலங்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டு, யாராக இருந்தாலும் அதை புனரமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுவதுடன், இன்றைய தினம் இந்நூல் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன், யாழ். விருது பெற்ற சபா. வாசுதேவக் குருக்களை வாழ்த்துவதுடன் யாழ். மாநகர சபை சார்பாகவும் நான் ஐயாவை பாராட்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# "சார்க்" செயலாளர் நாயகத்துடன் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு

தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் அர்ஜுன் பகதூர் தாபா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

சார்க் அமைப்பின் செயலாளர் நாயகமாக பதவியேற்ற பின்னர் அர்ஜுன் பகதூர் தாபா இலங்கைக்கான தமது முதலாவது விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

சார்க் நாடுகளிலுள்ள இளைஞர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக இளைஞர் மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டிய அவசியம் பற்றி ஜனாதிபதி இச்சந்திப்பின் போது வலியுறுத்தினார்.

காத்மண்டுவில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள 18 ஆவது சார்க் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இலங்கை எதிர்பார்ப்புடன் உள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நவம்பரில் இடம்பெறவுள்ள சார்க் மாநாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் தொடர்பான விசேட குறிப்புடன், பிராந்திய அமைப்பின் நடப்பு விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு, செயலாளர் எடுத்துக் கூறினார். பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் சித்ராங்கனி வகீஸ்வர ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## ரயில்...

புறப்படும் தபால் புகையிரதத்தில் நண்பர் ஒருவரை வழியனுப்புவதற்காக வவுனியா புகையிரத நிலையத்திற்கு வந்து புகையிரதத்திற்குள் இருந்து நண்பருடன் உரையாடி விட்டு புகையிரதம் செல்வதற்கு ஆயத்தமாகிய நிலையில் மேற்படி நபர் வாயில் பக்கமாக கீழே இறங்க முற்பட்ட போது தவறி கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்த நபரை உடனடியாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி மரணமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் மரணமடைந்தவர் இல 102, கரப்பன்காடு, வவுனியாவை சேர்ந்த முனியாண்டி ஜெயபிரகாசம் (வயது - 65) என தெரியவருகின்றது.

இவரின் மரணம் தொடர்பாக வவுனியா நகர திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் மேற்படி மரணம் தொடர்பான விசாரணையை மேற்கொண்டார். (70)

## காணாமற்....

செய்தியை அறிவித்ததாகவும், இந்த நியமனத்துக்கு தான் சம்மதம் தந்துவிட்டதாகவும் கௌஷல் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

தான் 1970 இலிருந்து நிறுவி நடத்திவரும் கிராமப்புற வழக்குகள் மற்றும் உரிமைகள் மையம் என்ற அமைப்பின் சார்பாக 1999 இல். நடத்திய மனித உரிமைகள் தொடர்பிலான கருத்தரங்கு ஒன்றில் அப்போது இலங்கையின் தொழில் மற்றும் மீன்வளத்துறை அமைச்சராக இருந்த மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டதாகவும் தெரிவித்த கௌஷல், இலங்கைப் பிரச்சினை குறித்து தனக்குப் புரிதல் உண்டு என்று கூறினார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை வலுப்படுத்த வேண்டுமென்று பல முறை இலங்கை அரசை வற்புறுத்திவந்த போதிலும் அதில் இதுவரை தான் பெரிய வெற்றி பெறவில்லை என்று கூறிய கௌஷல், ஆனால் இந்த ஆணைக்குழு இந்த காணாமற் போனோர் பிரச்சினை குறித்துத் தீர்வொன்றைத் தரும் என்ற நம்பிக்கை தனக்கு நூறு சதவீதம் இருப்பதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்தவிற்கு நெருக்கமானவராகக் கருதப்படும் நிலையில், அவரால் இந்த விஷயத்தில் ஒரு முரண்பட்ட அக்கறை இருக்கும், பாரபட்சமின்றி செயற்படமுடியாது என்று அச்சம் எழலாம் அல்லவா என்று கேட்டதற்கு பதிலளித்த அவர், தான் மகிந்தவுக்கு மட்டும் நெருக்கமானவன் இல்லை, பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத் தமிழர்கள் பலருக்கும் நெருக்கமானவன் என்றார்.அரசு மட்டும் போரின் போது மனித உரிமைகளை இழைக்கவில்லை, விடுதலைப் புலிகளும் அதே குற்றச்சாட்டை எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும் என்றார் கௌஷல். இந்த இரு பக்கங்களும் தனக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

## வெங்காய...

கிழங்கிற்கான இறக்குமதி வரி 15 ரூபாவாலும், பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமிற்கான இறக்குமதி வரி 25 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

## கசூரினா...

வேளையில் நீரில் மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த ஏனையவர்கள் கூக்குரலிட்டதைக் கேட்டு கடற்கரைப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உடனடியாக கடலில் குதித்து அவரைக் கரைக்கு கொண்டுவந்தனர்.

உடனடியாக காரைநகர், வலந்தலை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார் அங்கு முதலுதவியளித்துவிட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டுசெல்லும் போது வழியில் மரணமடைந்தார்.

மட்டக்களப்பு, கொழும்பு வீதியைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை அலோசியஸ் (வயது - 66) என்பவரே உயிரிழந்தவராவார். இவருடைய சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வடக்கில்...

மேலும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று வரை மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு, மன்னார், மடு ஆகிய பிரதேசங்களில் நான்கு நாட்கள் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன.

நேற்று இடம்பெற்ற இறுதி நாள் விசாரணைகள் மடு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் போது மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை மலர்ந்துள்ளது என்பது தெரிகின்றது. அத்துடன் அவர்கள் காணாமற் போனோரை கண்டுபிடிப்பதற்கு தேவையான செய்திகளை எம்முன் தந்துள்ளனர்.

மாவட்டத்தில் ஒரு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் (154,000) பேர் காணாமற் போயுள்ளதாக எமக்கு தெரியப்படுத்தியிருக்கின்றனர். மன்னாரை பொறுத்தவரையில் வாயால் தான் முறைப்பாட்டை சொல்கின்றார்கள். இதைத் தவிர மனுக்கள் விண்ணப்பங்கள் எமக்கு அனுப்பப்படவில்லை.

மன்னாரில் காணாமற் போனோர் சம்பந்தமாக மனுக்கள் விண்ணப்பங்களை அனுப்பும் படி பத்திரிகைகள் மற்றும் பிரதேச செயலர்கள் சம்பந்தப்பட்டவர்கள் மூலம் அறிவிக்கும் படி அறிவித்தல்கள் கொடுத்திருந்தோம். ஆனால் இன்று வரைக்கும் கூறப்பட்ட தொகைக்கேற்ப விண்ணப்பங்களோ மனுக்களோ எங்களுக்கு அனுப்பப்படவில்லை.

ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்ட கணக்கெடுப்பும் நாங்கள் மேற்கொண்ட கணக்கெடுப்பும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றது. மன்னாரில் பல சங்கங்கள் அமைப்புக்கள் சொன்ன கணக்கிற்கும் இதற்கும் பாரிய வித்தியாசங்கள் உள்ளன.

இருந்த போதும் காணாமற் போனவர்களின் தொகை அதிகரித்து இருக்குமாயின் அனுப்பிவைக்கும் பட்சத்தில் அதை கவனத்தில் எடுத்து அரசாங்கத்துடன் பேசி நல்லதொரு முடிவை எடுக்க நடவடிக்கை மேற்கொள்வேன்.

இனிவரும் விண்ணப்பங்களை நாங்கள் பெறும்பொழுது அதை தட்டிக்கழிக்காமல் தக்க நடவடிக்கை எடுப்போம். இவ் விசாரணையில் குறைபாடுகள் பிரச்சினைகள் இருப்பதாக இதுவரைக்கும் எவரும் முறைப்பாடு செய்யவில்லை.

5,000 பெரும்பான்மையின மக்கள் காணாமற் போயிருப்பதாக எங்களுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. இதில் அவர்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் தகப்பனின் முகம் தெரியாமல் இருக்கலாம்.

இப்பகுதியில் காணாமற்போன மக்களில் பெரும்பான்மையினத்தைச்சேர்ந்த 5000 பேரை கழித்தால் மிகுதியாக சுமார் 13,000 பேர் மட்டுமே காணாமற்போனோரின் பட்டியலில் இருந்தாலும் அதில் இறந்தவர்களின் கணக்கும் உள்ளாகியிருக்கும்.

எங்களுக்கு ஒரு முறைப்பாடு கிடைக்கப் பெற்றது. காணாமற் போனோரில் அதிகமானோர் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர் என்று வெளிநாட்டு அமைச்சிற்கும் இது அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெளிநாடுகளில் அவர்களுக்கென ஒரு சட்டம் உள்ளது.

அவர்களின் சட்டங்களுக்கமைய அங்கு அகதிகளாக தஞ்சம் புகுந்தோரின் பெயர் விபரங்களை அவர்கள் எமக்கு தர மாட்டார்கள். ஆனால் இங்கு காணாமற் போனோர் சம்பந்தமாக அவர்களின் பெயர் விபரங்களை தரும் பட்சத்தில் வெளிநாடுகளில் சட்ட முறைப்படி பெற முயற்சிக்கலாம். இருந்தபோதும் வெளிநாடுகள் சட்ட முறைப்படி பெயர் விபரங்களை எமக்கு தருவதை தவிர்த்துக்கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வாழ்வியல்...

தலைமையிலான அரசின் தகவல் திணைக்களம் நாடளாவியரீதியில் பாரபட்சமற்ற வகையில் இவ்வாறான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் மூன்று மொழிகளில் ஊடகங்கள் தமது செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

ஊடகம் என்பது மக்களுக்கு உண்மைகளையும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் செயற்பட வேண்டும்.

துரதிஸ்டவசமாக சில ஊடகங்கள் அவ்வாறு நடக்கவில்லை. இவ்வாறு கடந்த காலங்களில் ஊடகங்களின் தவறான வழிநடத்தல் காரணமாக மக்கள் அவலத்திற்குள் தள்ளப்பட்டனர்.

இவ்வாறான மனித அவலங்களுக்கு ஊடகங்களும் முக்கியமான காரணமாக இருந்துள்ளன.

கடந்த காலங்களில் மக்களுக்கு ஊடகங்கள் சரியான தகவல்களை வழங்காத காரணத்தினால்தான் இந்நிலையேற்பட்டதை நினைவுபடுத்துகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் பெரும் எழுச்சியுடன் மூன்று தமிழ் மன்னர்களது சிலைகள் திறந்து வைக்கப்பட்ட செய்தி ஊடகங்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடல் மூலம் உங்களது அனுபவங்களை மட்டுமன்றி அதனூடாக உங்களது திறமைகளை மேலும் மேம்படுத்திக் கொள்ள வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அரசாங்க தகவல் திணைக்களமும், யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டும் கருத்தரங்கை நடத்துகின்றன.

இதில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரட்ன அத்துகல, ஊடகத்துறை அமைச்சின் மேற்பார்வையாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எ.எச்.எம். அஸ்வர், வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் உரைநிகழ்த்தினர். இதில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தகவல் திணைக்களப் பணிப்பாளர் வசந்தப்பிரிய உள்ளிட்ட தகவல் திணைக்களத்தின் துறைசார்ந்த அதிகாரிகளுடன் தென்னிலங்கை ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

# வலை உற்பத்திக்கு ஊக்குவிப்பு களநிலையில் நிலைவரம் ஆராய்வு



குருநகர் பகுதியில் அமைந்துள்ள விக்டோரியா மீன்வலை உருவாக்ககத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விஜயம் மேற்கொண்டு அதன் தொழிற்துறை நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடினார்.

குருநகர் பகுதிக்கு அமைந்துள்ள மேற்படி தொழிற்சாலைக்கு அமைச்சர் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான வடகடல் நிறுவனத்துடன் இணைந்து இணக்கப்பாட்டுடனும், புரிந்துணர்வுடனும் தொழிற்துறை நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்பிரகாரம், குறித்த தொழிற்சாலையின் வருவாயை முன்னேற்றும் அதேவேளை, தொழிலாளர்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியுமென அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், இவ்வாறான தொழிற்துறை நடவடிக்கைகளை மேம்படுத்தி அவற்றின் ஊடான உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவை தரமானதாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு முன்னெடுக்கப்படும் பட்சத்தில் வெளியிடங்களிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு தடை விதிக்கப்படும் அதேவேளை, இறக்குமதிப் பொருட்களுக்கு உரிய வரியை விதிப்பதற்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்க முடியுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். கத்தோலிக்க திருச்சபையின் நெபாட் நிறுவனத்தினால் நடத்தப்படும் இத்தொழிற்சாலையில் 103 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, இங்கு பணியாற்றுவோர் நிறுவனத்திற்கும் தொழிலுக்கும் விசுவாசமாக அக்கறையுடன் செயற்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்ட அமைச்சர் இங்குள்ள பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காண்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

இதில் வடகடல் நிறுவனத்திற்கும் இத்தொழிற்சாலைக்கும் இடையில் இணக்கப்பாட்டின் அடிப்படையில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பிரகாரம் மீன்வலைக்கான நூலை உருவாக்கும் மூலப்பொருளை அமைச்சர் அவர்கள் தொழிற்சாலையின் திட்டப் பணிப்பாளரிடம் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

## வருமானம் குறைந்த பெண்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்



இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள 25 பெண்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

'குட்னஸ்' நிறுவத்தினால் வழங்கப்பட்ட இந்த துவிச்சக்கர வண்டியொன்றின் பெறுமதி 13,500 ரூபாவாகும்.

தாளையடி ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் இது தொடர்பான வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் 'குட்னஸ்' நிறுவனத்தின் முகாமையாளர் பஷானா இப்றாஹீம், 552 ஆவது படையணியின் தலைவர் கேணல் பிரசந்த ரணவக்க மற்றும் தாளையடி வித்தியாலயத்தின் அதிபர் ஆகியோர் உட்பட பிரதேசவாசிகள் கலந்துகொண்டனர்.

## தபால்மூல வாக்களிப்பு அடுத்த மாதம் 4 ஆம் திகதி

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தல்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் அடுத்த மாதம் 4, 5 ஆம் திகதிகளில் அரச நிறுவனங்களில் நடைபெறும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்திலிருந்து 25,872 அரச ஊழியர்களும், மொனராகலை மாவட்டத்திலிருந்து 15,000 அரச ஊழியர்களும் தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

ஊவா மாகாண சபைக்கான தேர்தல் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## விதுர எம்.பி.காயம்

(கொழும்பு)

ஹொரணையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முன்னாள் பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான ரட்ணசிறி விக்ரமநாயக்கவின் மகனான ஐ.ம.சு.முவின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க படுகாயமடைந்தார்.

## மாதர் சங்க புதிய நிர்வாகம் தெரிவு



நாவலடி அரியாலை கிழக்கு மாதர் சங்க புதிய நிர்வாகத் தெரிவு நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.மாலினி தலைமையில் இடம்பெற்றது. நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன், மாதர் சங்கத் தலைவி ச.சந்திராதேவி, நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேசா, பொது மக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## உபுல் ஜயசூரியவுக்கு பாதுகாப்பு வழங்க உறுதி

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரியவுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க நேற்று உறுதியளித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

கொழும்பில் தன்னைப் பல நேரங்களில் மோட்டார் சைக்கள் மூலம் இனம் தெரியாதோர் பின்தொடர்வதாகத் தெரிவித்து தனக்கு பாதுகாப்பு அளிக்குமாறு உபுல் ஜயசூரிய கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன்படி பாதுகாப்புப் பணியில் 27 சிவில் உடையணிந்த பாதுகாப்பு அதிகாரிகள் ஒரு பகுதியினராக இருப்பார்கள் என்றும், தனிப்பட்ட பாதுகாப்பு வழங்குவதற்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளரினால் அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் சேனாநாயக்க தெரிவித்தார். மேலும் இவ்விடயம் குறித்த விசாரணைகளை தான் தொடர்ந்து மேற்கொள்ள முடியாது எனவும் தனது பொறுப்பை பிரதி பொலிஸ் மா அதிபர் கா்மினி நவரத்ன ஏற்று நடத்துவார் என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் சேனாநாயக்க மன்றில் தெரிவித்தார்.

# நாட்டில் நல்லிணக்கம் உருவாக ஐ.நா.வின் விசாரணை உதவும்

### இது நவிபிள்ளையின் நம்பிக்கை

இலங்கைக்கு விஜயம் செய்யாமலேயே போர்க்குற்றங்கள் குறித்து ஆக்கபூர்வமான விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. விசாரணைக்குழு தகவல்களை சேகரிக்க இலங்கைக்குள் வர அனுமதி வழங்கப்படமாட்டாது என இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு வெளியில் தகவல்களை பெறக் கூடிய சிறந்த வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைக்குழுவினர் நாட்டுக்கு அனுமதிக்கப்பட்டாலும் அனுமதிக்கப்படாவிட்டாலும் ஆதாரங்களை உறுதிப்படுத்துவது சரியான தரத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

வடகொரிய மற்றும் சிரியா ஆகிய நாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இந்த இரு நாடுகள் தொடர்பான விசாரணைக்கு இலங்கை சம்பந்தமான விசாரணைக்கும் வித்தியாசங்கள் இருப்பதாக நான் காணவில்லை.

இந்தியா மற்றும் தாய்லாந்து விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியாக செய்திகளில் உண்மையில்லை.

இலங்கையிடமோ அல்லது வேறு நாடுகளிடமோ விசா கோரி எவரும் விண்ணப்பிக்கவில்லை.

விசாரணைக்குழுவினர் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தொடர்பாக சில இலங்கை ஊடகங்களில் திரிவுபடுத்தப்பட்ட தவறான தனிப்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

12 பேர் கொண்ட விசாரணைக் குழு ஜெனிவாவை தளமாகக் கொண்டு இயங்கும். தேவை ஏற்பட்டால் வேறு நாடுகளுக்கு விஜயம் செய்யும். விசாரணைக்குழுவினர் சாட்சியங்கள், தகவல்களை சேகரித்து வருவதுடன் அட்டூழிய குற்றச்சாட்டுக்களை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விசாரணைகளில் அவர்கள் கண்டறியும் விடயங்களை எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் சமர்ப்பிப்பார்கள்.

குற்றச் செயல்களுக்கு யார் பொறுப்புக் கூறவேண்டும் என்பதை கண்டறியவே விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

சமாதானம், நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒரு வழியை உருவாக்கி கொடுக்க இந்த விசாரணையானது சகல இலங்கையர்களுக்கு நன்மையாக அமையும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

## விபத்தில் சிக்கியவர் கோமா நிலையில்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியவர் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 7 ஆம் வியாழக்கிழமை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வீதியால் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த ஒருவர் மீது எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் வந்தவர் தலையில் காயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்படி நபர் கோமா நிலைமைக்கு உள்ளாகியுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் சிக்கி கோமா நிலைமைக்கு உள்ளானவர் வவுனியா மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த எஸ்.கனகரட்ணம் (வயது-67) எனத் தெரிய வருகின்றது. (70)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.